# கதிரவன்

*Kathiravan* කතිරවන්

## கல்வி இலக்கிய கலைச் சஞ்சிகை – 10




60/=


கதிரவன் கதிர் 10 சிறப்படைய வாழ்த்துக்கள்
சிகா பேக்கரி
பிரதான வீதி, புதுக்குடியிருப்பு
உரிமையாளர்:- சி.கிருஸ்னாகரன்
0757286061

Relax Net Cafe
I will with you
தற்பொழுது எமது புதுக்குடியிருப்பில்
• இணையம்
• 3D கேம்ஸ்
• ஸ்கானிங்
• கலர் பிரின்ரிங்
• ரைப் செற்றிங்
• டிஜிடல் பிரின்டிங்
• போட்டோ சொப் டிசைனிங்
• CD, DVD ரைட்டிங்
• மிகக் குறைந்த செலவில் போட்டோ பிரதி & பிரின்ரிங்
அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்
Relax Net Cafe
பிரதான வீதி, புதுக்குடியிருப்பு - 5
Tel : 0775152589

கதிரவன் கலைக்கழகம் (KAC) தோற்றம் 28.04.1976
பதிவு இல. வகிமா/கஅ/பண்/மட்/21/2000 தாபகர் சி.தங்கராசா

"வாழும் தமிழ் வாழ்க"

KAC

உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க உறுப்பிதழ்

# கதிரவன்

## கல்வி இலக்கிய கலைச் சஞ்சிகை

ஐப்பசி - மார்கழி (2011)

## கதிர் - 10

பிரதம ஆசிரியர் : திரு.த.இன்பராசா (கதிரவன்)

**கதிரவன் கலைக்கழகம் நிர்வாகம் (2011)**

தலைவர் : திரு.த.இன்பராசா
உபதலைவர்: திரு.த.தயாபரம்
செயலாளர்: திரு.சி புவனேந்திரன்
உபசெயலாளர்: திரு.ச.மதன்
பொருளாளர்: திரு.ந.பிறேமக்குமார்

பிரிவுத் தலைவர்கள்:
கதிரவன் நெனசெல திரு.த.கோபாலகிருஸ்ணன்
கதிரவன் கல்வி நிலையம் திரு.ப.சுதர்சன்
கதிரவன் வெளியீட்டகம் திரு.சௌ.லோறன்ஸோ
கதிரவன் நூலகம் திரு.சி.சுதேஸ்வரன்
கதிரவன் பாலர் பாடசாலை செல்வி.ந.சறோஜினி

தொலைபேசி : 0754265201
0654903006

கணனி வடிவமைப்பு : அ.ஜெயலக்ஷ்மி

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு.

மணிக்கணக்கில் நிறைய பேசுவதைக் காட்டிலும் குறைந்தளவு காரியங்களை செய்வதே மேலானது.

## உள்ளே........

பக்கம்

✧ கதிரவன் பேசுகிறேன் 02

✧ கவிக்கதிர்
★ போதி மாதவப் புத்தர் 16
★ பச்சோந்தி 21
★ தூரத்து வெளிச்சம் 21
★ தமிழ் காக்க வாரீர் 22
★ கற்பிழந்த பூமி 25

✧ கட்டுரைக்கதிர்
★ முக்குல (முக்குவர்) அரசி... 03

✧ கதைக்கதிர்
★ அது ஒரு தனி உலகம்...... 17
★ உறவுகள் எங்கே? 23
★ (÷) அரணையும் தரையும் (x) 35

✧ நாடகக் கதிர்
★ அரிச்சந்திர மயான.... 12

✧ கலைக்கதிர் 26
✧ செய்திக்கதிர் 28
✧ அறிவுக்கதிர் 31
✧ கதிரவன் வாசகர் 32
✧ புலமைக்கதிர் 36

### தொடர்பு முகவரி

கதிரவன் கல்வி இலக்கிய கலைச்சஞ்சிகை
கதிரவன் கலைக்கழகம்
புதுக்குடியிருப்பு - EP
மட்டக்களப்பு - இலங்கை



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

PUBLIC LIBRARY JAFFNA

# கதிரவன் பேசுகிறேன்!

## கதிரவன் 10வது கதிர்



2008.12.26ம் திகதி கதிரவன் சஞ்சிகையின் முதலாவது பிரசவம். நடந்து வந்த பாதையினையும் கடந்து சென்ற காலங்களையும் நினைத்துப்பார்க்கின்றேன். மூன்றாண்டு முடியும் மகிழ்ச்சியில் 10வது கதிரவன் புத்துயிர் பெறுகின்றது. ஆமை வேகத்தில் கதிரவன் வரவு ஆனால் இலக்கை நோக்கிய பயணம் மனத்திற்கு அமைதி.

சாதனைபடைக்கும் செயற்பாடாக கருதவே இல்லை இது சந்தோசம் கொடுக்கும் ஏற்பாடு சும்மா தூங்கிக் கெடுக்கும் நேரத்தை அம்மா மொழிக்காக பயன்படுத்துவது ஆத்மதிருப்தி. தமிழ் மொழியை நேசிக்கும் உண்மையான தமிழர்களின் வரிசையில் கடைசி இடத்தையாவது பிடிக்கலாம் என்கின்ற உற்சாகம். அதன் வெளிப்பாடே கதிரவன் சஞ்சிகை வெளியீடு.

கலை இலக்கிய உறவுகளே! சிகரத்தை தொட்ட சிற்றிதழ்கள் சிறகடித்துப் பறக்கின்ற காலகட்டத்தில் செட்டை முளைக்காத சிட்டாக கதிரவன் காலடி எடுத்து வைக்கின்றது. தூக்கிப்பிடிப்பதும் தாக்கியடிப்பதும் உங்கள் உள்ளம் கையிலே உள்ளது தவறுகளை சுட்டிக்காட்டுங்கள் கதிரவன் வளர தட்டிக்கொடுங்கள் எமக்கும் எமது மொழிக்கும் ஏற்பட்டுள்ள கலங்கத்தினை இல்லாதொழிக்கும் செயலில் கதிரவனுக்கும் பங்குள்ளதாக கருதுகின்றேன்.

புதிய எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதில் முதிய எழுத்தாளர்களை கௌரவப்படுத்துவதிலும் கதிரவன் எப்போதும் ஒழித்துக்கொள்ளாது. நீங்கள் உற்சாகமூட்டும் வரை கதிரவன் வரவில் தடையேற்படாது மட்டக்களப்பு மண்ணில் தற்காலம் கலை இலக்கியம் வீரநடை போடுகின்ற பொற்காலம். புத்தக வெளியீடுகளும், சிற்றிதழ்களின் வரவுகளும் சிறப்பாகவே நடைபெறுகின்றன. தமிழ் பேசும் உறவுகளே! சளைத்துப்போகாமல் இவ்வாறான கலை இலக்கிய நிகழ்வுகளுக்கு உதவிக்கரம் நீட்டுங்கள் பார்வையாளர்களாக இல்லாமல் பங்காளிகளாக மாறுங்கள். இந்த வகையில் காலாண்டு இதழாக வெளிவரும் "கதிரவன்" கல்வி இலக்கிய கலைச் சஞ்சிகையினை வாழ வைப்பதும் மாழவைப்பதும் உங்கள் எண்ணத்திலே தங்கியுள்ளது. மிகவிரைவில் 11வது கதிரில் சந்திக்கும்வரை.

**- கதிரவன் -**

கதிரவன் 09இன் தொடர்ச்சி

# முக்குல (முக்குவ) அரசி உலகநாச்சி மண்முனை அவள் இராஜதானி

செல்வி.க.தங்கேஸ்வரி(பி.ஏ.தொல்பொருளியல் சிறப்பு)

## உலக நாச்சியின் அரசிருக்கையும் நிர்வாகமும்

மண்முனை அரசி உலகநாச்சி என்பதும் மண்முனை இராட்சியத்தை உருவாக்கியவள் உலகநாச்சி என்பதும் பல்வேறு வரலாறு, இலக்கியங்கள் மூலம் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் மண்முனை இராட்சியம் என்பது இன்றுள்ள மண்முனைப் பிரதேசம் மட்டுமா? அல்லது ஆற்றுக்கு அப்பாலும் இருந்ததா? என்பதில் பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. தாழங்குடா மாளிகைத் தெரு என்ற இடத்தில் மாளிகை இடிபாடுகள் காணப்பட்டன என்பதும், இங்கு உலகநாச்சியின் மாளிகை இருந்தது என்பதும் சான்றுகள் மூலம் தெளிவாகின்றன. இங்கு இராட்சிய பிரிவுக்கு ஏற்றவாறு அரண்மனை, நிர்வாகத்தினர் போன்றோருக்கான இருப்பிடங்கள் என்பன அமைக்கப்பட்டிருந்தது என்பதை இப்பிர தேசத்தின் பெயர்கள் காட்டுகின்றன. உலக நாச்சி நூறு குகக் குடும்பக் குடிகளையும், முப்பது சிறைக் குடிகளையும் வரவழைத்தாள் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இந்தச் சிறைக் குடிகள் என்போர் தொண்டுகள் செய்வோராகும்.

உலகநாச்சியின் மாளிகை அமைந்திருந்தது என இன்று மக்கள் கருதுமிடம் தாழங்குடாவாகும். இங்கு மாளிகைதெரு என வழங்குமிடம் உலகநாச்சியின் மாளிகை அமைந்திருந்த இடம் என்பர் இதையடுத்து போடியார் தெரு எனப்படும் வீதியுள்ளது. அடுத்து நடுத்தெரு உள்ளது. அடுத்து தட்டார் தெரு, அம்பட்டர் தெரு, வண்ணார் தெரு என ஒழுங்கு முறைப்படி அமையப்பெற்றது. எனவே இது பண்டு உலகநாச்சி கொண்டு வந்த சிறைக் குடிகள் வசித்த இடங்கள் ஆகலாம். அதேபோன்று தாழங்குடாவிற்கு கிழக்கு முனையில் புதுக்குடியிருப்பு கிராமத்துக்கு அயலில் (கரையோரம்) மணக் காட்டு வேடர் என்போர் வசித்தனர். இவர்கள் உலகநாச்சியின் காடு வெளியாக்கும் வேளைக்கு உதவியவர்களாக இருக்கலாம்.

போர்த்துக்கேயர் காலத்தில் இவர்களுக்கு 75 ஏக்கர் நிலம் வழங்கப் பட்டது என அறிய முடிகிறது. இவர்களது பரம்பரையில் இறுதியாக பொன்னர் என்பவரும், அவரது மகன் செம்பன் என்பவரும் வாழ்ந்ததாகவும் அறிய முடிகின்றது. எனவே உலக நாச்சியின் ஆட்சி வாவியின் இருபுறமும் அமைந்திருந்தது என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.⑨

## உலகநாச்சியின் அரசிருக்கையும் நிர்வாகமும்

### (அம்பிலாந்துறை - காப்பு முனைக்காடு பகுதி)

மட்டக்களப்பு மான்மியத்தில் அம்பிலாந்துறைக்கு அப்பால் மண்ணேறி





PUBLIC LIBRARY JAFFNA

முனை பிரதேசம் உலகநாச்சிக்காக வெளியாக்கப்பட்டு அவளது மாளிகை அமைக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது. பின்னர் அவள் காப்பு முனைக் காட்டை வெளியாக்கி ஒரிசாவிலிருந்து பல குடிகளையும் வரவழைத்து குடியமர்த்தி அப்பகுதிக்கு அரசியாகி மண்முனை இராச்சியம் என நாமம் சூட்டி ஆட்சி செய்தாள் எனப்படுகிறது.

ஆகவே தாழங்குடா, மண்முனை, கோயில்குளம் போன்ற ஆற்றின் இப்புறம் உள்ள ஊர்களும் அம்பிலாந் துறை, மகிழடித்தீவு, கொக்கட்டிச் சோலை, முனைக்காடு, மணல்புட்டி, தாந்தாமலை போன்ற ஆற்றின் மறுபுறம் உள்ள ஊர்களும் உலக நாச்சியின் ஆட்சியில் இருந்தன எனலாம்.

உலகநாச்சி ஆற்றின் இருபுறத்தும் அமைந்திருந்த பரந்த பிரதேசத்தை ஆட்சி செய்தமையாலே தான் தாந்தாமலைப் பிரதேசத்தின் கற்கள் எடுத்து கோயிற்குளம் லிங்கேஸ்வரர் கோயிலை கற்கலினால் கட்டுவித்தாள் எனலாம்.

இவள் தனது தம்பியை அனுப்பி முப்பது சிறைக்குடிகளை அழைப்பித்தாள். இவர்கள் ஊழியம் செய்வோராகும். அவர்களில் கொத்தனார் (மேசன்), மேஸ்திரியார்(சிற்பிகள்) ஆகியோரும் அடங்குவர். இவர்கள் கற்பாறைகளை உடைத்து கொத்தன்மார் தங்கியிருந்த கொத்தனார் புலத்திற்கும், மேஸ்திரியர் தங்கியிருந்த மேஸ்திரியார் துறைக்கும் கொண்டு வந்து சிற்பங்கள், கற்தூண்கள், படிகள், கல்நிலைகள் போன்ற ஆலயத்திற்கு தேவையான பொருட்கள் செய்து தெப்பங்கள் மூலம் அவற்றை கோயில்குளத்திற்கு கொண்டு வந்து லிங்கேஸ்வரர் கோயிலை அமைத்தனர். எனலாம். கொத்தியாப்புலையில் பல்வேறு காலகட்டங்களில் புடைப்பு சிற்பங்கள், நாகசிற்பங்கள் எனபன (10) காணப்பட்டன. எனவே இப்பிரதேசம் வரை உலகநாச்சியின் ஆட்சி பரவியிருந்தது. கொத்தியாபுலையில் எடுக்கப்பட்ட பொருட்கள் இன்று மட்டக்களப்புக் கச்சேரியில் அரும் பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இதே போன்று மண்முனைப் பிள்ளையார் ஆலயமும் மிகப்பழமை வாய்ந்ததொன்றாகும். 1990களில் இங்கு பல சிற்பத்தட்டுக்கள் கிடைக்கப்பெற்றதாகக் அறியமுடிகிறது. எனவே இக் கோயிலையும் உலகநாச்சி காலத்து பிள்ளையார் கோயில் எனவும் கருதலாம். பழமைவாய்ந்த இப்பிள்ளையார் ஆலயம் புனரமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### உலகநாச்சியும், கோயில் குளமும்

கோயில் குளம் உலகநாச்சியின் இராச்சியத்தில் ஓரிடமாகும். இது இன்று தெற்கே தாழங்குடாவும், வடக்கே ஆரையம்பதியும் மேற்கே காங்கேயனோடையும், கிழக்கே வேடர் குடியிருப்பும் அமைந்து மண்மேடாக உள்ள கிராமமாகும்.

உயர்ந்த கோபுரத்தைக் கொண்ட கோயில் இங்கு உலகநாச்சியால் அமைக்கப்பெற்றது என்பது வரலாறு அப்படி பெரிய கோயிலும், குளமும் இருந்ததால் தான் கோயில் குளம் என்ற பெயரும் ஏற்பட்டது எனலாம். அக் காலத்தில் அத்தகைய பெரிய கோயில்கள் இருந்ததாக எதுவித சான்றுகளும் இல்லை. இன்றும் கூட கோபுரத்துடன்

கூடிய கோயில்கள் அபூர்வமாகவே உள்ளன.

இங்கு தற்போதும் தூர்ந்து போன தாமரைக்குளம் உள்ளது. 1980களில் தனியார் காணி ஒன்றில் குழி தோண்டிய போது ஐந்துதலை நாகத்தின் கீழ் உள்ள புத்தர் சிலை, படிகலிங்கம், கந்துவிளக்கு ஒன்றின் உடைந்த பாகங்கள் என்பன ஒரு பெரிய குடத்தி லிடப்பட்டு புதைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. (11)

மேலும் சுமார் நூறு வருடத் திற்கு முன்னர் இக்கோயிலின் இடிபாடு களுக்குள் பாரிய கற்தூண்க ளும். கல் நிலைகளும் கண்டெடுக்கப் பட்டு அவை ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலிலும், திருநீலகண்ட பிள்ளையார் கோயிலிலும், பயன்படுத்தப்பட்டுள்ளன. கோயில் குளம் லிங்கேஸ்வரர் கோயில் உயர்ந்த கோபுரத்துடன் அமைந்த கோயில் என்பதனாலேயே அந்த இடம் பின்னர் 'சிகரம்' என அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. சிலவேளை, கோயில் குளத்தில் கற்கோயிலை ஏன் உலகநாச்சி நிறுவினாள் என்ற கேள்வி எழலாம். (12) அதற் கான காரணம் வருமாறு உலக நாச்சி வந்தகாலம் இந்தியாவிலே கற்கோவில் கள் எழுந்த காலப்பகுதி யாகும். எனவே இங்கும் இத்தகைய கோயில் அவள் எழும்பியதில் வியப்பில்லை.

மலைகள், குன்றுகள் அற்ற பிரதேசத்தில் எப்படி கல் பெற்றாள் என்றாள் இவளுடைய ஆட்சிப்பிரதேசம் முனைக் காடு, அம்பிலாந்துறை, தாந்தா மலை வரை பரந்த பிரதேசமாகும். தாந்தா மலைப் பகுதியிலிருந்து கொத்தனார் துறை (இன்றைய கொத்தியாப்புலை) மூலம் கற்களை தெப்பங்கள் மூலம் தருவித்து கற்கோயிலை அமைத்தாள் எனலாம்.

## அரசி உலாநாச்சியும், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரமும்

உலகநாச்சி கோயில்குளம் லிங்கேஸ்வரர் கோயிலையும், கொக்கட் டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் ஆல யத்தையும் அமைத்தாள் என்பது மட்டக்க ளப்பு மான்மியம் கூறும் செய்தி யாகும். இதன் கர்ண பரம்பரைக் கதைகளும் கூறுகின்றன. உலகநாச்சி யின் ஆட்சிப் பிரதேசம் பண்டாரியாவெளி, படை யாண்டவெளி, கொக்கட்டிச்சோலை தொடக்கம் தாந்தாமலை வரை பரந்தி ருந்தது என்பதை முன்பே பார்த்தோம்.

கொக்கட்டி மரம் ஒன்றை வெட்டியபோது அதிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தோட திடகன் என்னும் வேடன் உலகநாச்சியிடம் கூறியதாகவே மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. ஏற்கனவே பூர்வக்குடிகளின் (இயக்கர், நாகர்) வழிவந்த வேடர்கள் இப் பிரதேசங்களில் வாழ்ந்துள்ளனர். அவர்களால் ஆறாதிக்கப்பட்ட மரவழிபா டுகள் லிங்கவழிபாடுமே இங்கு ஆதியில் காணப்பட்டுள்ளது. இதன் பிரதிபலிப்பே வேடன் (திடகன்) கண்ட கொக்குநெட்டி மர லிங்கமாகும். இதனை உலக நாச்சியே ஆலயமாக்கி வீரசைவக் குருமாரை பூசகர்களுமாக்கினாள்.

கோயில்குளம், கொக்கட்டிச் சோலை, இரண்டும் உலகநாச்சியால் வணங்கப்பட்ட கோயில்களாகும் கொக்கட்டிச்சோலை தேர்த்திருவிழா உற்சவ காலத்தில் கோயில் குளத்திலி

ருந்து கொக்கட்டிச் சோலைக்கு வேல் கொண்டு செல்லும் வழக்கம் ஒன்று இருந்தது என அறிய முடிகிறது. பின்னர் கோயில்குளம் அழிந்ததும் அவ்வழக்கம் ஆரையம்பதி கந்தசுவாமிக் கோயிலுக்கு மாறியது. இன்றும் ஆரையம்பதி முருகன் கோயிலி லிருந்து கொக்கட்டிச்சோலை உற்சவத் தில் வேல் கொண்டு செல்லும் வழக்கம் உள்ளது. கொக்கட்டிச்சோலை ஆலய நடைமுறைகள் மாகோன் வகுத்த வன்னிமை முறைகள் என்றாலும் அதற்கு முன்னரே உலகநாச்சியின் கலிங்க நடைமுறைகளே பின்பற்றப்பட்டன. ஒரிசாவில் இருந்து தருவிக்கப்பட்ட முப்பது சிறைக்குடிகளும் கொக்கட்டிச் சோலையிலும் அவள் ஆட்சிக்குட்படுத் தப்பட் இடங்களிலும் பல்வேறு தொண்டூழியங்களை செய்தனர். பின்பு இதே நடைமுறைகளை கலிங்கமாகோன் (1215-1255) வகுத்து நிவந்தனைகள் வழங்கினான். அதே தொண்டூழியங்கள் நடைமுறையில் இன்றும் நடைமுறையில் உள்ளன. கொட்டகட்டிச்சோலையில் மட்டுமே இந்நடைமுறை உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மேகவர்ணன், குகசேனனது, நெருங்கிய நண்பனாவான். எனவே புத்த தந்தத்தை குகசேனன் மேகவர்ணனுக்கு அனுப்பி வைத்தான் இதனைப்பிறர் மூலம் அனுப்புவது பாதுகாப்பற்றது எனக் கருதிய குகசேனன் தனது மக்களிடம் (உலகநாச்சி, உலகநாதன்) கொடுத்து அனுப்பி வைத்தான். பாதுகாப்பின் பொருட்டே புத்ததந்தம் கூந்தலுக்குள் மறைத்து வைத்துக் கொண்டு வரப்பட் டது. இச்செய்தி மகாவம்சத்தில் புத்தரின் புனித தந்தத்தைக் கொண்டு வந்தவள் ஒரு பிராமணப்பெண் என்று கூறுப்பட்டுள் ளது. (Mahavamsa I ch XXXVII குறிப்பு 92-93)

அப்படியானால் உலகநாச்சி படிகலிங்கத்தையும் ஏன் தன்னுடன் கொண்டு வரவேண்டும்? அதற்கு காரணம் மக்கள் கவனத்தை திசை திருப்புவது மட்டுமல்ல. கலிங்க நாட்டிலே இந்து பௌத்த மதங்கள் எவ்வித முரன்பாடு மின்றி ஒன்றாகவே வளர்ந்தன. 'புத்தர் விஸ்ணு' வின் அவதாரம் என்ற கோட்பாடு காரணமாக இவ்விளக்கம் ஏற்பட்டது போலும், எனவே கிழக்கிலங்கையில் வாழ்ந்த கலிங்க வம்சத்தினரைக் கருத்தில் கொண்டு உலகநாச்சி படிகலிங் கத்தைக் கொண்டு வந்தாள் எனலாம். மேலும் இலங்கையில் ஆதிகாலங்களில் பௌத்தத்தை அனுசரித்தவர்கள் தமிழர் களே என்பதும் மறைக்க முடியாது. கிமு. 2ம் நூற்றாண்டுகளில் பௌத்ததை முதலில் ஏற்றுக் கொண்ட மன்னன் தேவநம்பியதீசன் ஓர் இந்து என்பது கவனிக்கத்தக்கது. அதுபோல வெள்ளரசு நாட்டு விழாவிற்கும் தென் பகுதியில் ஆட்சி செலுத்திய கதிர்காமச்ஷத்தி ரியர்கள், சந்தணகாமபிரபுக்கள் சென்றி ருந்தார்கள் என்பதும தீபவம்சம் கூறும் செய்தி (13) இவர்கள் பாண்டிய தொடர் புடைய தமிழ் மன்னர்கள். எனவே கலிங்கத்திலிருந்து வந்த உலக நாச்சி க்கு பௌத்தத்துடன் தொடர்பு இருந்த தில் ஆச்சரியமில்லை. உலக நாச்சி காலம் இந்தியாவில் இந்து, பௌத்தம் ஒன்றாக நடைபோட்ட காலம். அக் காலத்தில் பௌத்தத்தை அனுசரித்தோர் இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மண்முனை அரசி உலகநாச்சியும் குடிமுறைகளும்

மட்டக்களப்பு முக்குவதேசம் என அழைக்கப்பட்டது. என முன்னுரையில் ஓரிடத்தில் கூறப்பட்டுள்ளதை அவதானித்தால் பின்வருமாறு கருத்துக் கொள்ள முடியும். உலகநாச்சி கலிங்கத்திலிருந்து வந்தவள் என்றும் குகக்குடும்பங்கள் பலவற்றை தனது படைக்கும் பாதுகாப்புக்கும் குடியேற்றியுள்ளாள். அவளது பெயராலே அவளது குடும்பப் பரம்பரை தொடர்நதுள்ளது. அப்போது முக்கியம் பெற்ற இந்த மூன்று பரம்பரையினருமே நாளடவில் 1 ஒரு பிரிவினர் உலகநாச்சி குடி எனவும், உலகிப்போடிக் குடியெனவும் இன்று உலயப்பா குடி எனவும் மருவி உள்ளது. 2 அடுத்து தனது படைகளாகவும், பாதுகாப்புக்கும் கொண்டு வந்த குகக்குடிகளே படையாச்சிக் குடி எனவும். படையாண்ட குடி எனவும் பெயர் பெற்றது. 3 அடுத்து கலிங்கத்தி லிருந்து வந்த ஏனைய உறவுகள் கலிங்க குடி எனவும் பெயர் பெற்றது. தற்போது காலிங்காகுடி எனவும் பெயர் பெற்றது. ஆகவே இந்த மூன்று குடியினரும் அதாவது உலகிப்போடிகுடி, படையாட்சிக்குடி, காலிங்காகுடி என்ற முக்குலத்தவருமே அக்காலத்தில் நிர்வாக நடைமுறைகளில் பங்கு கொண்டனர். எனவே இவர்கள் முக்குலத்தோர் எனப்பட்டு முற்குகர் எனப்பட்டு பின் முக்குவர் என மருவியது என்பதே யதார்தமானது. பொதுவாக உலகநாச்சியுடன் வந்த அனைவருமே பின்னர் முக்குலத்தோர் என அழைக்கப் பட்டனர் எனலாம். உலக நாச்சி என்னும் மண்முனை அரசியின் கொடியின் சின்னம் எழுதுகோல் எனக் குறிப்பிடப்படுகின்றது.

அன்ரனிசில் தனது ஆய்வுகளின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார்.* (14) மட்டக்களப்பு மான்மியத்தின் "குலவிருதுகள்" என்ற கல் வெட்டிலே ஒவ்வொரு குலத்திற்கும் உரிய விருதுகள் கூறப்பட்டுள்ளது. அதில் இருபத்தியொரு குலத்தவர்களுக்கு விருதுகள் கூறப்பட்டுள்ளது. அவை வருமாறு. (15)

"தோணி கரையார்க்கு தொப்பி
துலுக்கனுக்கு
காணியுழ மேழசுளி காராளருக்கு
நாணி வில்லம்பு நாட்டிலுள்ள
வேடுவர்க்கு
எழுத்தாணி சுளி முற்குகர்க்கு கமலமலர்
கோயிலார்க்கு
கைப்பிரம்பு பண்டாரப்பிள்ளைக்கு
திமிலர்க்கு பால்முட்டி
சேனியர்க்கு நூலாச்சு அமலருக்குத்
தேர்க் கொடிகள்
அம்பட்டருக்குக் கத்தரிக்கோல்
விமலருக்கு மத்து
வேதியர்க்கு பூ ணுலாம்
வண்ணார்க்குக் கல்லு வாணிபர்க்குச்
செக்கு (லசில்)
சுண்ணாம்பு சுடும் கடையர்க்குக்
கூடையாம்
தொல்லு வேந்தர்க்குச் செங்கோல்
மேளமது வள்ளுவர்க்கு
சேர்ந்த குயவர்க்குக் கும்பமுடன்
செப்புவேன் இன்னும்
தட்டார்க்குக் குறடு சாரையர்க்குக் கத்தி
செட்டி குலத்தோருக்குத் தோடு
தராசுபடி
இட்டமுடன் இந்த விதிப்படிக்கு எல்லாம்
விருதெனவே
பட்டமது கட்டி வைத்தான் பாண்டி
மன்னன்"





PUBLIC LIBRARY JAFFNA

இக்கல்வெட்டுப்பாடலில் கூறப்பட்டுள்ள விருதுகளில் முக்குகர்க்கு உரிய விருதாக எழுத்தாணிசுளி கூறப்பட்டுள்ளது. எனவே முற்குக அரசி உலகநாச்சியின் கொடியின் சின்னம் எழுத்தாணி என்பதில் ஆச்சரியமில்லை. இதுவே பின்னர் படையாட்சி குலத்தவர்க்கு உரியதாகிறது.

அதே போன்று இந்த குலத்தவர்க்கும் தனித்தனியே விருதுகள் வழக்கிலிருக்கின்றன. (16) இவை பண்டு இருந்து இன்று வரை பேணப்படுவதையும் காண முடியும். அவை நிறை குடம்(கும்பம்) வைப்பது தொடக்கம் நிலப்பாவாடை விரிப்பது ஆடை கொய்து போடல், தீபமிடல், குடைபிடித்தல், குரவையிடல், பறைமேளம் போன்ற வரிசைகள் இம்முக்குலத்தோர்க்கும் வழக்கிலிருக்கின்றன.

கலிங்க குடியினர்க்கு பதின்மூன்று கும்பமும், பதினெட்டு சிறைவரிசையும், உலகிப்போடி குடியினருக்கும் பதினொரு கும்பமும், பன்னிரெண்டு சிறைவரிசையும், படையாட்சி குலத்தவர்க்கு ஒன்பது கும்பமும் ஒன்பது சீலை கொய்தும் ஏழு சிறைவரிசையும் செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இதற்குறிய விபரமனைத்தும். "நன்மைக் கும் தீமைக்கும் கும்பவரிசை " என்ற மட்டக்களப்பு மான்மிய கல்வெட்டுப் பாடல்களில் உள்ளன. மேலும் இங்கு பதினேழு சிறைக்குடிகள் செய்யும் ஊழியமும் எவை என விளக்கப்பட்டுள்ளது. இவை எல்லாம் உலகநாச்சி அழைத்து வந்த சிறைக்குடிகள் செய்தனர். பின்னர் அவை தொடர்ந்து கலிங்க மாகோனால் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டன. மாகோன் வகுத்த வன்னிமைகளிலும் இவைகள் தொடரப்பட்டன. (17) இவற்றை கொக்கட்டிச்சோலை ஆலய நடைமுறைகளில் காண முடியும்.

மேற்கூறப்பட்ட வரிசைகள் போன்று இந்த முக்குலத்தவர்களுக்கும் தனித்தனி விருதுகள் உள்ளன. அவ் விருதுகள் இவர்களின் மாடுகளுக்கு குறிசுடும் போது இன்றும் குறித்து இருப்பதை காணமுடியும்.

## குலவிருதுகள்

உலகிப்போடி குல விருது என்பது மாட்டின் பின் சந்திலே எட்டுக்கால் எனப்படும் சின்னமும், கீழே "ம" குறியும் இருக்கும் இந்த "ம" என்பது மண்முனை என்பதைக்குறிக்கும். முன்சந்திலே இளம் பிறையும் கீழே பசும்பை எனப்படும் இரு முக்கோணங்கள் இணைந்தபடியான குறியீடும் காணப்படும்.

இதேபோன்று படையாட்சிக்குடி விருது என்பது முன்சந்திலே முடி எழுத்தாணி என்பதும் கீழே எழுத்தாணி முடிவில் "ம" என்ற மண்முனையை குறிப்பதான குறியீடும், பின்சந்திலே பட்டுச்சங்கு எனப்படும் உட்புறமும் இணைந்த இரு முக்கோண சின்னமும் குறி இடப்படும்.

கலிங்க குடியினருக்கும் இதே போன்ற சீனிபுள்ளடி எனப்படும். மேலும் கீழும் "ம" "ம" வை இணைந்த குறியீடு குறிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட முக்குலத்தவர்களின் விருதுகளில் உலகநாச்சி அரசி முடி எழுத்தாணியையே அவளது கொடியின் சின்னமாக பயன்படுத்தி இருக்கிறாள் என்பது வரலாறு.

உலகநாச்சி ஆட்சிக்காலத்தில் அவள் கொண்டு வந்த குகக்குடும்பங்கள்



"ஒரு மனிதன் சினம் அடையும்போது விவேகம் வெளியே போய்விடுகிறது."

(முக்குலக்குடும்பங்கள்) முக்குகர் ஆயினர். இவர்கள் மண்முனை மட்டக்களப்பு முழுவதுமே பரந்திருந்த னர். பாணமை வரை காணப்பட்டனர். உலகநாச்சி என்னும் மண்முனை அரசியின் ஆட்சி பாணமை வரை காணப் பட்டது எனப்படுகிறது. அதுவும் ஏற்கக் கூடிய ஒன்றாகும். ஏன் எனில் இவள் மட்டக்களப்பு மன்னன் குணசிங்கனின் தம்பி கிரிசரணை திருமணம் செய்தாள். பின்னர் இவளது மகன் வந்த சந்ததியி னரே பல நூற்றாண்டுகள் ஆட்சி செய்த னர் என்பது மட்டக்களப்பு மான்மியம் கூறும் செய்தி. அப்படியானால் பாணமை வரை இவளது ஆட்சி காணப்பட்டது என்பது யதார்த் தமானது. எனவே மட்டக்களப்பு மண்முனை இராச்சியத்தை உள்ளடக் கிய பரந்த பிரதேசம். "முக்குவ பிரதேசம்" என அழைக்கப்பட்டதில் வியப்பில்லை. கிபி 328- கிபி 348 வரை இவளது ஆட்சி நிலவியது.

உலகநாச்சியின் வழிவந்த கலிங்கக்குடி, உலகநாச்சிகுடி, படை யாட்சிகுடி எனப்பட்ட முக்குலத்தோர் - முற்குகர், முக்குவர், முக்கியர் என்றெல் லாம் அழைக்கப்படலாயினர். இது பின்னர் உலகநாச்சியுடன்தொடர்புடைய அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்படலா யிற்று. இதைவிட இவர்களின் தொடர்பு டைய மேலும் பல குடியின் பணிக்கனார் குடி, கச்சிலாகுடி போன்ற பல குடி முறையினர் உள்ளனர்.

## உலகநாச்சி கொண்டு வந்த சிறைக்குடிகள்

உலகநாச்சி கொண்டு வந்த சிறைக்குடிகள் என்போர் மாதுலர், கோயிலர், பண்டாரம், பண்டாரப்பிள்ளை, வள்ளுவர், குசவர், கொல்லர், வாணிபர், வண்ணார், அம்பட்டர், சானர், பள்ளர், பறையர், கோவியர், தவசியர், கடையர் என்பனவாம். இவர்கள் கலிங்கக்குலம், படையாட்சிக்குலம், உலகிப்போடிக் குலம், பணிக்கனார்குலம் என்போருக்கு மட்டுமே ஊழியம் செய்பவர்கள் என்ற கட்டளையும் இருந்தது. உலகநாச்சி முப்பது சிறைக்குடிகளைக் கொண்டு ஊழியம் செய்வதற்கு கொண்டு வந்தாள் என்பது முன்னரே பார்க்கப்பட்டது. இருபத்தொரு குலத்தவரின் விருதுகள் முன்னரே கூறப்பட்டது. (18) இவர்களின் கொத்தனார் (மேசிலார்), மேஸ்திரிமார் (சிற்பிகள்), போன்றோரும் அடங்குவர். இரண்டு கோயில்களுக்கும் ஆரம் கட்டுவதற்கும் ஆட்களைத் தருவித்தாள் என்பதும் முன்னர் கூறப்பட்டது.

உலகநாச்சி கொண்டு வந்த சிறைக்குடிகளில் வீரசைவக் குருமார், இவர்களே முக்குவருடைய கோயில்க ளின் இன்றும் பூசை செய்யும் பூசகராவார். முக்கியமாக இந்நடைமுறை கொக்கட் டிச்சோலை தான்தோன்றீஸ்வரன் கோயிலிலுள்ளது

## உலக நாச்சியால் தொடங்கி வைக்கப்பட்ட வீரசைவ வழிபாடு

உலகநாச்சி கலிங்கத்திலி ருந்து (ஒரிசா) வந்தவள்.வீரசைவ வழிபாடு உடையவள். எனவே தான் இவள் புத்த தந்தத்தை கொண்டு வரும்போதே கைலயங்கிரியில் தம் முன்னோர் வைத்திருந்த லிங்கத்தையும் கொண்டு வந்தாள். கோயில் குளத்திலே தான் கொண்டு வந்த படிகலிங்கத்திற்கு கோயில் அமைத்தாள். அவளது முக்கிய வழிபாட்டுத்தலமும் அக்கோயிலாக

இருந்தது. கொக்கட்டிச்சோலை லிங்கக் கோயிலும் இவளால் ஆராதிக்கப்பட்டது. அதற்காகவே வீரசைவக் குருமார்களையும் வரும்படி செய்து பூசை செய்ய அமர்த்தினாள்.

வீர சைவம் என்பது லிங்காயுதம் எனப்படும். சிவபிரானை லிங்க உருவத்தில் வழிபடுவது வீரசைவம். சிவசக்தியே பிரபஞ்சத்தையும், ஆன்ம கோடிகளையும் அருட்சக்கதியாக நின்று கட்டுவிப்பது என்று கூறுவது வீரசைவம். இதனை சக்தி விசிட்டாத்வைதம் எனக் கூறுவர். கிழக்கிலங்கையில் குறிப்பாக மண்முனை இராட்சியத்தில் இரண்டு லிங்கக் கோயில்களையும் உருவாக்கி லிங்க வழிபாட்டை பரவச் செய்தவள் மண்முனை அரசி உலகநாச்சி ஆவாள். பின்னர் கலிங்க மாகோனால் மேலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### தொகுப்புரை.

1) பண்டைய மட்டக்களப்பு பிரதேசம் என்பது பாணமையிலிருந்து வெருகல் வரை பரந்து விரிந்து காணப்பட்ட பிரதேசமாகும்.

2) கலிங்க இளவரசி உலகநாச்சி மண்முனை இராட்சியத்தை உருவாக்கினாள். மண்முனை, இராட்சியம் என்பது வாவியின் இருபுறமும் தாழங்குடா கோயில்குளம், மண்முனை, அம்பிலாந்துறை, கொக்கட்டிச்சோலை, முனைக்காடு, கொத்திப்புலை, தாந்தாமலை முதலான பல இடங்களிலும் பரந்து விரிந்த காணப்பட்டதோடு பாணமை வரை காணப்பட்டதாம்.

3) வீரசைவ வழிபாடுடைய உலகநாச்சி கொக்கட்டிச்சோலை, கோயில்குளத்திலும் லிங்கக் கோயில்களைக் கட்டுவித்தாள்.

4) இக்கோயில்களிலும் இவளது ஆட்சிப்பிரதேசத்திலும் தொண்டூழியம் செய்வதற்கு முப்பது சிறைக்குடிகளை அழைத்து வந்து பலநடை முறைகளையும் வகுத்தாள். அந்நடைமுறைகள் இன்றும் நடைமுறையில் இருந்தாலும் கொக்கட்டிச்சோலையில் விசேடமாக உள்ளன.

5) சில இடங்கள் இன்று வழக்கொழிந்து வருவயையும் காணலாம்.

6) முக்குவ அரசி உலகநாச்சி காலத்து மட்டக்களப்பு, மண்முனை இராட்சியங்கள் முக்குவதேசம் என அழைக்கப்பட்டது. இந்த முக்குவ தேசத்து கோயில்களில் பூசை செய்ய வீரசைவக் குருமாரை அழைத்து வந்து குடியேற்றி னாள். பல இடங்களில் இன்றும் இவ்வீரவைக் குருமாரே பூசை செய்கிறனர்.

7) உலகநாச்சியினால் வகுக்கப்பட்ட குல விருதுகளும், கும்பவரிசை, சீலை கொய்தல் இன்றும் பல உள்ளன. கலிங்கக்குடி, படையாட்சிக்குடி, உலகிப்போடிக்குடி, என்பன அக்காலத்து முக்கியம் என அழைக்கப்பட்டதோடு பணிக்கனார்குடி, கச்சலாகுடி போன்ற மேலும் பல அழைக்கப்பட்டனர். எல்லாருமே முக்குவர் என அழைக்கப்பட்டனர்.

8) முக்குல அரசியான உலகநாச்சி தனது கொடியின் சின்னமாக எழுது கோலையே கைக்கொண்டார் இது படையாட்சி குலத்தவரின் சின்னமுமாக உள்ளது.

9) உலகநாச்சி மண்முனை இராஜ்யத்தில் தனிப்பெரும் அரசி ஆவாள்.

## அடிக்குறிப்புக்கள்

1) Census of Ceylon – 1963. Batticaloa desired pp. 112 – 113.
2) Inscriptions of Ceylon by s. paranawitana pp.xiii Ceylon census Report - 1972
3) a) The lost Lamuniu by sccot Eliot –
   b) வரலாற்றுக்கு முற்பட்ட வடக்கும் தெற்கும் சு.மு. பரமானந்தசிவம்
4) மட்டக்களப்பு மான்மியம் பதிப்பாசிரியர் – by FXC நடராசா மட்டக்களப்பு.
5) மட்டக்களப்பு மான்மியம் பதிப்பாசிரியர் - by FXC நடராசா பதிப்பு 1952 -pp 42, 43
6) (i) Mahavamsa – ed. by Willham Galger ch 37 nots 92ii
   (ii) Epigraphy India xv 246.
7) மட்டக்களப்பு மான்மியம் - FXC நடராசா மட்டக்களப்பு 1952 PP. 42, 43
8) மட்டக்களப்பு மான்மியம் - FXC நடராசா மட்டக்களப்பு 1952 PP. 42, 43
9) மக்களிடையே பரவும் மரபுக் கதைகளும், தகவல்களும், மட்டக்களப்பு.
10) இவைகள் மட்டக்கப்பு கச்சேரி நூதனசாலையில் உள்ளன.
11) a) இப்பொருட்கள் கோயில்குளத்தில் வீடொன்றில் உள்ளன.
12) இலங்கையின் தூபிகள் – by பரணவிதாண
13) (i) Mahavamsa – ed by Willham Galger ch
   (ii) தீபவம்சம்.
14) வீரகேசரி வார வெளியீடு 10-4-1990 கட்டுரை.
15) மட்டக்களப்பு மான்மியம் - FXC நடராசா தொகுப்பு – மட்டக்களப்பு 1998 - பதிப்புPP.97
16) மட்டக்களப்பு மான்மியம் - FXC நடராசா தொகுப்பு புதிய தொகுப்பு – மட்டக்களப்பு 1998 -PP. 98, 99, 99,100, 101
17) மாகோன் வரலாறு - எழுத்தில் க. தங்கேஸ்வரி – 1995 மட்டக்களப்பு 1998 -PP. 72
18) மட்டக்களப்பு மான்மியம் - FXC நடராசா தொகுப்பு புதிய பதிப்பு 1995

கதிரவன் வெளிவர உதவும் அனைவருக்கும்
கதிரவன் கலைக் கழகத்தின் நன்றிகள்.



PUBLIC LIBRARY
JAFFNA

கதிரவன் 09இன் தொடர்ச்சி

# அரிச்சந்திர மயான காண்டம்

தயாரிப்பு : த.இன்பராசா (கதிரவன்)

(2003ம் ஆண்டு மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலயம் அகில இலங்கை தமிழ்த்தினப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்) (2006ம் ஆண்டு மண்முனைப்பற்று பிரதேச சாகித்திய விழாவில் முதலாம் இடம்) பெற்ற இசை நாடகம்

**(தெருவோரமாக சந்திரமதி நடந்து வருகிறாள்.)**

**புலையனான அரிச்சந்திரனின் கட்டளைக்கிணங்கி அந்தணரிடம் சென்று பொருள்களை பெற்று வருவதற்காக சந்திரமதி சென்று கொண்டிருக்கிறாள். வீதியோரத்திலே காசி வேந்தனின் மகன் இறந்து கிடக்கின்றான். அந்த சிறுவனை கண்ட சந்திரமதி விதிவசத்தால் மதிமயங்கி அச்சிறுவனை தன் மகன் லோகிதாசன் என நினைத்து வீழ்ந்து அழுகின்றாள்.**

**பிண்ணனி பாடல்:**

மதியின் எழில் போன்ற.........
மதி தெருவால் செல்லுகையில்
காசி வேந்தன் புதல்வன் தெருவில்
இறந்துமே தான் கிடக்கக் கண்டால் - 2
மதியும் தான் மயங்கி .........
மதியவளின் விதியின் பயன்
தான் பெற்ற குழந்தை என்று } 2
சிறுவன் மீது வீழ்ந்தழுதாள் }

**சந்திரமதி :-** மகனே! லோகிதாசா! என் மனம் பதறுதடா உனக்கு ஏனப்பா இக்கதி நேரந்தது.....

**பாடல் சந்திரமதி:**

என்ன செய்வேன்? ஏது செய்வேன்.........?
இறந்தனையோ என் மகனே!
பொன் போன்ற மேனியுள்ளாய்....... } 2
புலம்புகிறேன் பாதகி நான். }

**சபைப் பாடல்:** (என்ன செய்வேன்........)

(இவ்வேளையில் காசிவேந்தன் மகனை தேடி இரண்டு காவலர்கள் வருதல்)

**காவலர் வரவு**

**பிண்ணனி பாடல்:** தானன்ன தானன்ன தானா - தன
தானன்ன தானன்ன தானா

**காவலர் - 1** காவலர் நாம் இங்கு வந்தோம்
காசி வேந்தன் புதல்வனைத் தேடி
(சபை..... காவலர்.....)

**காவலர் - 2** மாபெரும் காசியின் வேந்தன் - மகன்
மாயமாய் எங்கே தான் போனான்?

**பிண்ணனி பாடல்:** தானன்ன தானன்ன தான - தன
தானன்ன தானன்ன தான

**காவலர் - 1** எங்கே போய் இருப்பான் யாராவது திருடர்கள் அல்லது பகைவர்கள் கொண்டு போய் விட்டார்களோ...? இல்லை கொன்று விட்டார்களோ?
(தேடுகிறார்கள்.......)

**காவலர்** அதோ... காசி வேந்தன் மகன்... அவனருகில் ஓர் பெண்....! ஆகா. கொலைகாரி, பாதகி....! காசி வேந்தன் மகனை கொன்றுவிட்டாயா?

**காவலர் - 1** ஐயோ...! பாவம் பச்சிளங் குழந்தையை கொலை செய்வதற்கு உனக்கு எப்படி மனசு வந்தது.... நீ எல்லாம் ஓர் பெண்ணா...? வா உடனே அரசனிடம் செல்ல.

**காவலர் - 2** இவளுக்கு தக்க தண்டனை வாங்கி கொடுக்க வேண்டும் ம்.... நட.....
(சந்திரமதியின் இரு கரங்களையும் கட்டி அரசனிடம் காவலர்கள் கொண்டு செல்லல்)

**பிண்ணனி பாடல்:** மதியால் மதி மயங்கி.......
சதியோ.......! விதியின் பயன்
கெதியின்றி தவிக்கின்றாளே....! சந்திரமதி
கேடகற்ற ஏது செய்வோம். ஐ.... ஐயோ.

## காட்சி -3

(காசிவேந்தன் அரண்மனையில் புத்திரசோகத்தால் வாடி இருத்தல்)

**இடம் :- அரண்மனை**

**பாத்திரங்கள் :- அரசன், காவலர்கள், சந்திரமதி**

**அரசன்:** கடவுளே! என் மகனை இன்னும் வரக்கானும் தேடிச் சென்ற காவலர்களையும் காணவில்லை என்ன நடந்ததோ.... ஒன்றுமே புரியவில்லை ஏதும் தெரியவில்லை.

**காவலர்:** மன்னவா! மாபெரும் காசியின் வேந்தனே!
தங்கள் மகனை கொன்ற கொலைகாரி இதோ.

**அரசன்:** கொலையா.....? என்... மகனா...? இல்லை.... இருக்கவே முடியாது....

**காவலன்:** ஆம் வேந்தே! தெருவோரமாய் தங்கள் மகனை தேடிச் செல்லும் போது இந்த பாதகி அகப்பட்டாள் தங்கள் மகனின் இறந்த சடலத்தின் மேல் வீழ்ந்து வீனாய் ........ அழுது கொண்டிருந்தாள்.

(மன்னன் சிந்நிக்கின்றான்.)

**அரசன்:** இவளா....? இந்தபெண் கொலைகாரியா? என்னால் நம்ப முடியவில்லையே... இவள் முகத்தைப் பார்த்தால் உயர்ந்த குடியில் பிறந்தவள்போல் இருக்கின்றாளே... (சிந்திக்கின்றான்) எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறது என்று யாருக்குத் தெரியும்?

**சந்திரமதி:** மன்னவா! சிந்தனை எதற்கு? கேள்விகள் எதற்கு? விசாரணை எதற்கு, நான் ஓர் அரக்கி தான் குழந்தைகளை கொன்று தின்பதே எனது வேளை உனது மகனையும் நான் தான் கொன்றேன் அதனால் சீக்கிரமாய் என்னை கொன்று விடுங்கள்.

**காவலன்:** மன்னவா! திறமையான கொலைகாரிகள் தங்கள் முகத்திலே ஓர் அறிகுறிகளையும் காட்டிக் கொள்ளமாட்டார்கள். கொலைக் குறி காட்டாத முகம் கொண்ட இவள் கைதேர்ந்த கொலைகாரியே சந்தேகம் இல்லை.

**அரசன்:** என் சந்தேகம் தீரவில்லை நிரபராதியைக் கொள்வது நீதியின் கழுத்தை நெரிப்பதாகிவிடும். ஒரு குற்றவாளி வேண்டுமானால் தப்பித்துப்போகலாம். (சிந்தித்து) நிரபராதி தண்டனை அனுபவிக்கக் கூடாது.

**சந்திரமதி:** காசி நகர் வேந்தனே! என்கையில் உன் மகனின் பிணத்தை கண்ட பின்னும் சந்தேகம் ஏன் இன்னும்.

**அரசன்:** காவலர்களே! இந்த அரக்கியை இழுத்துச் சென்று சுடலைக்கு கொண்டுபோய் இவள் தலையை வெட்டி சீவும்படி கட்டளையிடுங்கள்

**காவலன்:** அப்படியே ஆகட்டும் அரசே!

## காட்சி -4

**இடம் :- சுடலை**

**பாத்திரங்கள் :- சந்திரமதி, காவலர்கள், வீரபாகு, அரிச்சந்திரன் (புலையன்)**

**(காவலர் சந்திரமதியை சுடலை நோக்கி கொண்டு போதல்)**

தன்னான தான நன்னே........தன்னானே தான தன்னே
மயான பூமியிலே........
மங்கை வந்து நின்றவுடன்....
கொல்லன் உலைக்களமாய்...
கண்ணே ரெத்தினமே - மக்களின்
உள்ளம் கொதித்ததம்மா.....
பெண்ணே ரெத்தினமே........

நாடுநகர் இழந்து..........
நல்லதோர் மகனிழந்து
செல்வம் சிறப்பிழந்தாய்...
கண்ணே ரெத்தினமே - எங்கள்
உள்ளம் தவிக்குதம்மா
பெண்ணே ரெத்தினமே

**வீரபாகு:** புலையனே! இதோ நிற்கும் பாதகி காசி வேந்தர் மகனை கொன்றுவிட்டால். அரசனின் கட்டளைப்படி இவள் தலையை வெட்டிவிடு இது உன் தலைவன் வீரபாகுவின் கட்டளை.

(அரிச்சந்திரன் திகைத்து நின்றான்)
ஏன் தாமதம்... சொல்வதை செய்... நீ எனக்கு எப்போ அடிமையானாயோ அன்றில் இருந்தேநான் சொல்வதை கேட்க வேண்டும்.

**அரிச்சந்திரன்:** தலைவா! தாங்கள் சொல்வதை நான் தவறமாட்டேன் நீங்கள் சொன்னவாரே செய்கின்றேன். நீங்கள் நம்பிக்கையுடன் சென்று வாருங்கள்.
(வீரபாகு செல்லுதல்)

**(விசுவாமித்திர முனிவர் திரை மறைவில்):** அரிச்சந்திரா! உனக்கு ஏன் இவ்வளவு துன்பங்கள் இனியும் உனக்கு துன்பம் வேண்டாம். பாவம் நீ மிகவும் துவண்டு விட்டாய். ஒரு வார்த்தை உரைத்து விடு நீ எனக்கு தாரை வார்த்து தந்த நாட்டை தரவே இல்லை என்று மட்டும் ஒரு வார்த்தை கூறிவிடு உன் துன்பங்கள் எல்லாம் ஒரு நொடியில் உன்னை விட்டு ஓடிவிடும்.

**அரிச்சந்திரன்:** மாமுனிவரே! நீர்மேல் குமிழி போன்று நிலையில்லாத இந்த வாழ்க்கையை நிலையானது என்று மயங்கியா மிகப் பெரிய உயர்வுக்குரிய சத்தியத்திலிருந்து என்னைத் தவரச்சொல்கிறீர்கள்? எல்லாம் அறிந்த நீங்களே என்னை நெறி தவறி நடக்கச் சொல்வது முறையாகுமா? நகரையிழந்தோம், நல்ல மகனையிழந்தோம், செல்வம் இழந்தோம், சிறப்பினை இழந்தோம். இனி எங்களுக்கு உள்ளதாக என்றும் நற்கதியை இழக்க நேர்ந்தாலும் வாய்மையை மட்டும் இழக்க மாட்டோம்.
(அரிச்சந்திரன் வாளினை கையில் எடுக்கின்றான்.)
சந்திரமதி! உன் இஸ்ட தெய்வத்தை மனதிலே வேண்டிக்கொள்.
(சந்திரமதி இரு கரங்களையும் கூப்பியவண்ணம் வாய்மையில் சிறந்தவனான தன் கணவர் அரிச்சந்திரனை மனதிலே நினைத்தவளாக நிற்கின்றாள்)

(அரிச்சந்திரன் சந்திரமதி சிரத்தினை நோக்கி வாளினை வீசுகின்றான். வாள் மாலையாக மாறியது.)

**பிண்ணனி பாடல்:**
தேவலோக தேவர்களும்
மும்மூர்த்தி நாதர்களும்
பூலோகம் வந்தார்கள்
உத்தமரின் செயல் கான....

( இறைவனின் திருவருள் அரிச்சந்திர மகராஜன் மனைவி சந்திரமதி, மகன் லோகிதாசன் ஆகியோருக்கு கிடைக்கின்றது.

"வாய்மையே வெல்லும்"

- சுபம் -



PUBLIC LIBRARY JAFFNA

கதிரவன் 09இன் தொடர்ச்சி

- "கவிமணி" சி.க.பொன்னம்பலம் -

# போதி மாதவப் புத்தர் பகவான்

அன்பினால் இணைந்த அன்னோர்
அரசனின் குறிப் பறிந்து
இன்பநல் வாழ்வு சேர்ந்து
இல்லறம் இயற்று நாளில்
மன்னவன் மனம் உவப்ப
மைந்தனைப் பெற்றே ஈந்தார்:
[5] என்னினிக் குறை? என்று அப்போ
எய்தினன் மகிழ்வின் உச்சம்.

உலகியல் வாழ்வில் உற்றோர்
உறுதுயர் பலவாய்க் காணும்
நிலையெலாம் சித்தார்த்தன் தான்
தெரிந்திலன்; எனினும் ஏதோ
உள்மனம் உறுத்த, அவன்தன்
ஊரெல்லாம் சுற்றிப் பார்க்கும்
எண்ணம துடையான் ஆகி
ஏகினன் நகரை நோக்கி.

பிணியோடு வறுமை, மூப்பு,
மேவிடு நரை, தளர்ச்சி,
துணிவறு வாட்டம், சாவு
துயர்தரும் நிகழ்ச்சி யாவும்
தொடர்தர, மாந்தர் எங்கும்
துன்பமே வடிவாய்க் கொண்டு
சுழல்வது கண்டு, நொந்து
துணிவுடன் சிந்தித்தானே.

சிந்தனைத் தெளிவாய் அன்னோன்,
சேர்ந்திடு சுற்றம் நீத்த,
வந்தனை செய்து பெற்றோர்
மலரடி தொழுது, தன்தேர்
வந்தமர்ந் தாருங் காணா
வகையினில் கானகம் போய்,
[6] சொந்தமாம் உடைகள் மாற்றித்
தூயநல் தவத்தில் ஆழ்ந்தான்.

இடையறா முயற்சி யாலும்,
இணையிலா அடக்கத் தாலும்,
தடையிலாப் பயிற்சி யாலும்,
தளர்விலாத் துணிவி னாலும்,
அடைவதற் கரிதாம் ஞானம்
அடைந்தனன்; அதனை ஞாலம்
அடைந்திடப் போதனைகள் செய்த
அண்ணலைப் போற்றி வாழ்வோம்!

எண்பதாம் அகவை தன்னில்
எய்தினன் முழு [7]நிர்வாணம்;
கண்ணினை இமைகள் காக்கும்;
கருத்தினில் பஞ்ச சீலம்
திண்ணிய மனத்தினோடு
காத்துயர் ஞானம் பெற்றா
[8]தண்ணுலாம் தலைவன் பாதம்
சரணடைந் திடுதல் திண்ணம்.

கௌதம புத்தர் என்றும்
சாக்கியர் என்றும் கூறிக்
கோத்திரம், குடியாம் அற்ப
கூட்டினுள் அடைக்க லாமோ?
[9]பூமகள் வாழ மட்டும்
புகழ்மிகு ஞானியாய் வாழ்
ஆகமம், மறை கடந்த
ஆனந்த சொருபி அன்றோ!

அன்பின் உருவாய் திகழ்பவனை,
அறிவின் தெளிவாய் மிளிர்பவனை,
கருணைக் கடலாய் விரிபவனை,
காதல் செய்வார்க்(கு) அருள்பவனை,
ஞானச் சுடராய் ஒளிர்பவனை,
ஞாலம் போற்றும் நாயகனை,
சீலம் ஐந்தாய் [10]மலர்பவனைத்
தினமும் தொழுது நலம்பெறுவோம்!

| | | |
|---|---|---|
| 1- என்னினிக் குறை | - | இனி எனக்கு என்ன குறை |
| 2- சொந்தமாம் | - | தனக்கு உரியதான அரச உடைகள் |
| 3- நிர்வாணம் | - | முக்தியின்பம் ,வீடுபேறு |
| 4 - தண்ணுலாம் | - | குளிர்மையும், இனிமையும் பொருந்திய இறைவன் |
| 5 - பூமகள் | - | பூமாதேவியாகிய இவ்வுலகம் |
| 6 - மலர்பவனை | - | திகழ்பவன், பூரணமானவன் |

- முற்றும் -



"எல்லாப் பொருட்களின் ஆரம்பங்களும் மிகவும் சிறியவையே"

# அது ஒரு தனி உலகம்

சிறுகதை

- அன்புமணி -

காலையில் எழுந்தபோது ஒரு வித்தியாசத்தை உணர்ந்தேன் இடதுகால் முழுவதும் வீங்கியிருந்தது. மகனைக் கூப்பிட்டேன்.

"இதப்பாருடா! எவ்வளவோ சாப்பிட்டும் பருக்காத உடல் இப்போது பருக்க ஆரம்பித்து விட்டது. காலில் ஆரம்பம்" என்றேன்.

"அப்பா, இது திடீர் வீக்கம் உங்கள் உடலில் ஏதாவது கோளாறு இருக்க வேண்டும். உடனே டொக்டரிடம் காட்டவேணும் " என்றான் மகன்.

"டொக்டரிடம் காட்டத்தான் வேணும். கந்தோரிலிருந்து வந்ததும் டொக்டரிடம் போவோம்" என்றேன்.

அது எப்படியோ தடைப்பட்டு நான்கு நாட்கள் வரை டொக்டரிடம் காட்ட முடியாமல் போய் விட்டது.

ஐந்தாம் நாள் இடதுகால் தூண்போலப் பருத்து விட்டது. உடனே டொக்டரிடம் போக வேண்டும்.

தம்பி ரவிக்கு போன் செய்து மோட்டார் சைக்கிளுடன் வரும்படி கூறினேன். ரவியுடன் காத்தான்குடி ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். காலைப் பரிசோதித்த ரதீஸ்குமார் மிகவும் கவலைப் பட்டார். அன்ரிபயரிச் இஞ்செக்ஷன் போட்டார். பிளட்சுகர் பரிசோதனை நடந்தது. டொக்டர் அதிர்ந்து போனார்.

மாலை ஆறு மணிக்கு பற்பல சிகிச்சைகள் வழங்கப்பட்டன. ஆனால் எவ்வித முன்னேற்றமும் இல்லை.

உடனே என்னை அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்த னர். இரவு முழுக்க நரக வேதனை.

மறுநாட் காலை டொக்டர் குழுவினர் வந்து பரிசோதித்தனர். தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஸ்கான் எடுக்கப்பட்டது.

ஸ்கான் ரிப்போர்டைப் பாரத்த டொக்டர் பாலமுரளி பதட்டமடைந்தார்.

" இது கொரனொரித் ரொம் யோசிஸ்"என்றார்.

"அப்படி என்றால்?"

" ரத்தக்குழாயில் ரத்தக்கட்டி அடைத்திருக்கிறது. நல்ல வேளை ரத்த நாளம் என்ற படியால் தப்பினீர்கள். ஆபத்தாக முடிந்திருக்கும்" என்றார்.

"ரத்தக் கட்டிகளை எவ்வாறு அகற்றுவது? "

" பெரிய டொக்டர் வரட்டும்."

டொக்டர் மஹ்ரூப் வந்தார். டொக்டர்கள் நர்சுகள் எல்லோரும் தீவிரமாக கலந்தாலோசித்தனர்.

"**போரோ போமின்**" மருந்து ட்றிப் மூலம் ஏற்றப்பட்டது.

"படுக்கையை விட்டு நகரக் கூடாது. பாத்ரூம் போவதற்கும் வீல் செயரைப் பயன்படுத்துங்கள்" என்றார்.

ஒரு வாரம் இந்தச் சிகிச்சை தொடர்ந்தது. பின்னர் ட்றிப்பை அகற்றி விட்டு இஞ்செக்ஷன் போடப்பட்டது. அப்படியும் ஒருவாரம் கழிந்தது.

எவ்வித முன்னேற்றங்களும் இல்லை.

ஒவ்வொரு நாள் காலையிலும், மாலையிலும் டொக்டர்கள், வந்து பார்வையிட்டனர். அவர்களிடம் கேட்டால் திட்டவட்டமாக அவர்கள் எதுவும் சொல்லவில்லை. "படிப்படியாகத்தான் குணமாகும்" என்று சுருக்கமாகச் சொன்னார்கள்.

டொக்டர் மஹ்ரூப் பார்வையிட்டு இஞ்செக்ஷனை நிறுத்திவிட்டு அதே மருந்தை குளிசையாக உட்கொள்ளும்படி கூறினார்.

ஒவ்வொரு நாளும் மத்தியானம் 12 மணி முதல் 1மணி வரைபார்யையாளர் நேரம். உறவினர்களும் நண்பர்களும் வந்து என் கட்டிலை மொய்த்துக் கொள்வார்கள்.

தலைக்குத் தலை ஆலோசனை கூறுவார்கள்.

"மூன்று வாரம் ஆகியும் ஒரு முன்னேற்றமும் இல்லை. இனி இங்கேயி ருப்பது பிரியோசனமில்லை கொழும்புக்கு போக ஏற்பாடு செய்யுங்கள் " என்றார் தில்லைநாதன்.

அவர் எனது ஆத்ம நண்பர். என்னில் அதிக அக்கறை கொண்டவர்.

"நம்ம இஷ்டப்படி எப்படி கொழும்புக்குப் போவது டொக்டர் தானே அதைச் சொல்லவேண்டும்" என்றேன்.

"அவங்க என்னத்தைச் சொல்ற? பார்க்கத் தெரியுது தானே? இப்படித்தான் முன்பொருமுறை என் காலில் ஏற்பட்ட புண்ணைக் குணப்படுத்துவதற்காக இதே வார்டில் இருந்தேன். பத்து நாள் ஆகியும் புண் ஆறவில்லை. மருமகன் பார்த்துவிட்டு உடனே கொழும்புக்கு கொண்டுபோக ஏற்பாடு செய்தார். டெல்மன் ஹொஸ்பிட்டலில் அட்மிட் ஆகி, அங்கிருந்து ரோயல் ஹொஸ்பிட்டலுக்கு எடுத்துச் சென்றார்கள்.

டொக்டர் கணேஷரட்ணம் சிகிச்சை அளித்தார். ஒரே நாளில் புண் சுகமாகி 3 நாளில் வீட்டுக்கு வந்து விட்டேன்" இப்படிக் கூறினார். தில்லை நாதன்.

எனக்குக் கவலை பிடித்துக் கொண்டது. கொழும்பக்குச் செல்வதென்றால் லேசான காரியமா? ஆயிரக் கணக்கில் செலவாகும் பார்க்க மேய்க்க ஆட்களில்லை. என்ன செய்வது.

கொழும்புக்குச் செல்வதானால், தான் உடன் வருவதாக வேழலகன் கூறினார்.

அது மட்டுல்லவே பிரச்சினை!

மேற் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் ஆஸ்பத்திரிக் கட்டிலின் என் நாட்கள் நகர்ந்தன.

என்னால் வீட்டில் உள்ளவர்களுக்கும் துன்பம். தம்பி ரவி ஒவ்வொரு இரவும் என்னுடன் தங்கி நின்று விடியற்காலை 5 மணிக்கு எழும்பி வீல் செயாரில் என்னைக் கொண்டு சென்று, காலைக்கடன்களை முடித்துக் குளிக்கவும் உதவி செய்வர்.

மத்தியானம் வீட்டிலிருந்து யாராவது ஒருவர் சாப்பாடு கொண்டு வரவேண்டும். ஒருநாள், ஒருவாரம் என்றால் பரவாயில்லை. ஒரு மாதம் ஆகிவிட்டது. எத்தனை நாளைக்குத்தான் மற்றவர்கள் உதவி செய்வார்கள். நாட் செல்ல நாட் செல்ல அலுப்பு ஏற்படாதா?

இதற்கிடையில் பொலனறுவை பரிசோதனை நிலையம் ஒன்றுக்கு இரத்த மாதிரிகளை அனுப்பி ஐ.என்.ஆர் றிப்போட் பெறப்பட்டது. இரண்டு வாரத்துக்கு ஒருமுறை இது நடந்தது. ஒரு முறை 1.8 ஆக இருந்தது பின்னர் 1.7 ஆக

இருந்தது. பின்னர் 1.5க்குக் கீழிறங்கி விட்டது.

இந்த வீழ்ச்சியும் டொக்டர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

மீண்டும் ஒருமுறை ஸ்கான் எடுத்துப்பார்க்கப்பட்டது. அதிலும் எதுவித முன்னேற்றமும் இல்லை நாளத்தில் அடைத்திருக்கும் கட்டி படிப்படியாக கரைந்து குறையும் என்றார்கள். ஆனால் அந்தக் கூற்றை ஸ்கான் ரிப்போர்ட் நிராகரித்துவிட்டது.

ஒரு நாள் ஆயுர்வேத டொக்டர் கண்ணன் என்னைப் பார்க்க வந்தார். நாடி பிடித்துப் பார்த்தார்.

"இதற்கெல்லாம் ஆயுர் வேதத்தில் நல்ல மருந்து இருக்கி றது; நீங்க விரும்பினால் செய்யலாம்" என்றார்.

ஆஸ்பத்திரி வார்டில் இருந்து கொண்டே ஆயுர்வேத மருந்தை எப்படி உட்கொள்வது அதனால் அந்த யோசனையும் கைவிடப்பட்டது.

திரிசங்கு சொர்க்கத்தில் தத்தளித்தேன்.

காலில் வீக்கம் சற்றுக் குறைந்திருந்தது. ஆனாலும் டொக்டர் மஹ்ரூப் சொல்லாமல் மற்ற டொக்டர்களால் எவ்விதமுடிவும் எடுக்க முடியவில்லை. எனது துரதிஷ்டம், சில நாட்களாக டொக்கடர் மஹ்ரூப் வார்டுக்கு வரவில்லை.

இந்த இடைவெளியில் என்னை கொழும்புக்கு அழைத்துச் செல்லும் யோசனை தீவிரமடைந்தது. மகன் அருட்செல்வன், தேவையான பணத்தை தான் தருவதாகக் கூறினார். கொழும்பில் உள்ள உறவினர் ஒருவர் தனியார் ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறினார்.

தம்பி ரவியானந்தன் இதற்கு உடன்படவில்லை. "இப்படியான நோய்க்கு ஒப்பரேசன் செய்யாமல் கட்டியை அகற்றக் கூடிய டொக்டர் யாருடனாவது கலந்தாலோசித்த பின் தான், கொழும்புக்குச் செல்ல வேண்டும். அப்படி இல்லாமல் கொழும்புக்குச் சென்ற பின்னரும் இதே மாதிரியாக வார்டில் தங்கியிருக்க நேர்ந்தால் என்ன செய்வது?" என்று அவன் கேட்டான்.

அதன் கேள்வி நியாயமாகவே எனக்குப்பட்டது.

இதற்கிடையில் கொழும்பில் உள்ள உறவினர் மட்டக்களப்பில் உள்ள டொக்டர் கிருபாகரனிடம் ஆலோசனை பெறும்படி கூறினார்.

எனது வைத்திய அறிக்கை பிரதிகளுடன் ரவி டொக்டர் கிருபாகரனைச் சந்தித்தார். வைத்திய அறிக்கையை நன்கு பரிசீரிலித்த அவர்

"இந்த வருத்தத்திற்கு சேர்ஜிக் கல் றிமொடி இல்ப வெரி றெயார்" என்று கூறினாராம். இதை கேட்ட பின் கொழும்பு செல்லும் எண்ணம் தளர்ந்து விட்டது.

மனம் பொறுக்காமல் டொக்டர் பாலமுரளியிடமே, கொழும்புக்குச் செல்வது பற்றி ஆலோசனை கேட்டேன்.

"ஒப்பரேஷன் மூலம் கட்டிகளை அகற்றுவது ஆபத்தானது "மேலும் எழுபத்தைந்து வயதில் ஒப்பரேஷன் செய்ய எந்த டொக்டரும் முன்வர மாட்டார்" என்றார் அவர்.

"கட்டி உள்ள இடத்தை ஸ்கான் செய்து சிறிஞ்ச் மூலம் அதை உறிஞ்சி எடுக்கும் ஒருமுறை இருக்கிறதாமே டொக்டர் கொழும்பு தனியார் மருத்துவ மனைகளில் அப்படிச் செய்யலாமா?"





PUBLIC LIBRARY
JAFFNA

"யார் சொன்னது? அப்படிச் செய்யக் கூடுமா என்று எனக்குத் தெரியவில்லை. எதற்கும் பெரிய டொக்டரிடம் கேட்டுத்தான் டிக்கற் வெட்டலாம்."

இதற்குள் எனக்கு வேண்டிய சில நண்பர்கள் திடீரென்று உள்ளே வந்தார்கள்.

"நாங்கள் எப்படியும் இவரைக் கொழும்புக்குக் கொண்டுதான் போக வேண்டும். நீங்கள் டிக்கட் வெட்டா விட்டால், நாங்களாகவே அவரைக் கொண்டுபோவோம்" என்றார்கள்.

"ஏன் குழப்புறீங்க ....? டொக்டர் மஹ்ரூப் இப்ப வருவார் அவர் சொல்கிற படி செய்வம்."

"அதெல்லாம் சரி வராது டொக்டர், ஒரு மாசத்துக்கு மேல் வார்டில் இருந்திருக்கிறார். நீங்க திட்டவட்டமாக எதுவும் சொல்லல்ல. இப்படி இருந்தா அதற்கு என்ன தான் முடிவு?"

"சரியான வைத்திய முறையைத் தான் நாங்க செய்யிறம் நீங்க வீணாகத் தலையிட்டுக் குழப்புறீங்க, பெரியவர் வரட்டும். அதன் பிறகு முடிவு செய்வம்"

இப்படி வாக்குவாதம் நடந்து கொண்டிருக்கும் போதே டொக்டர் மஹ்ரூக் உள்ளே வந்தார்.

" நீங்க கொஞ்சம் வெளியே நில்லுங்க" என்றார் டொக்டர் பாலமுரளி. டொக்டர் மஹ்ரூப் ஸ்கான் றிப்போர்ட்டைப் பார்த்தார். கால் வீக்கத்தைப் பார்த்தார்.

அந்த நேரத்தில் வெளியே சென்ற நண்பர்கள் டொக்டர் மஹ்ரூபிடம் வந்தனர்.

"சேர் பல நாட்கள் இவர் வார்டில் இருந்திருக்கறார், என்ன நிலைமை என்று யாரும் சொல்லவில்லை. எப்போது இவரை டிச்சார்ஜ் பண்ணுவீங்க?"

"நீங்க யாரு?"

"நாங்க யாரா இருந்தா உங்களுக்கென்ன நோயாளியை எப்ப வீட்டுக்கு அனுப்புவீங்க?"

"ஐஸே திஸ் இஸ் டு மச்" , " அற்டென்டன்ற் இவங்களைப் பிடிச்சி பொலீஸில் ஒப்படைச்சிடு"

"யாரு எங்களையா? எங்களை அசைக்க முடியாது ! "

"கெற் அவுட் ஐஸே! கெற் அவுட் !" ஆஸ்பத்திரி ஊழியர்கள் வேகமாக வந்து அந்தக் கும்பலை மடக்கிப் பிடித்தார்கள் அவர்கள் திமிறினார்கள் ஆஸ்பத்திரி ஊழியர்களை தாக்க முயன்றார்கள். சற்று நேரத்தில் அல்லோல கல்லோலமாக இருந்தது.

சிறிது நேரத்தில் ஆஸ்பத்திரி பொலீஸ் வந்து அவர்களைக் கூட்டிக் கொண்டு போனார்கள். பேஷன்டின் பெட்டிக்கட்டை தரும்படி கத்தினார் டொக்டர் மஹ்ரூப். அனைவரும் திகைத்து நின்றனர். என்ன செய்யப் போகிறாரோ என்னு கலங்கி நின்றனர்.

அடாக்டர் மஹ்ரூப் சொன்னார். "ஸ்கான் றிப்பேர்ட் இஸ் ஓகே, ஹி கான் கோ ஹோம்."

அனைவரும் ஆறுதல் பெமூச்சு விட்டனர். எவ்வித சிக்கலும் இல்லாமல் நான் வீடு வந்து சேர்ந்தேன் கொழும்புப்ப பயணம் இல்லை. ஒப்பரேஷன் இல்லை பிரச்சினை சுமுகமாத் தீர்ந்து விட்டது.

நான் டொக்டர் மஹ்ரூப்பை நன்றியுடன் இதயத்தில் இருத்திக் கொண்டேன்.

- கவிஞர் சாக்கவிரா -

# பச்சோந்தி

விடியவில்லை முடியவில்லை
விரட்டியடிக்கும் கெடுபிடிகள்
அடிதடிகள் ஆக்கினைகள்
அளவு மிஞ்சி வடிகிறது
துடிதுடிக்கத் துட்டனவன்
தொலைத்தழித்த போதிலும்
படித்த பாடம் பதியாத
பாவிகளைப் பார் மனமே!

நெருப்புக்கு நேராக
நிமிர்ந்து நிற்கும் உறவுகள்
தெரு கூட சொந்தமற்று
தெரு நாய்போல் திரிகையில்
கறுப்புப்பணம் பெருகிவரும்
கயவர்களின் காலடியில்
செருப்பை விட கேவலமாய்
சோரம் போன கூட்டங்கள்

காட்டிக் காட்டிக் கொடுத்ததினால்
கடுகளவாய் போய்விட்டோம்
மூட்டி மூட்டி கொடுத்தவன் முன்
முளந்தாள் போட்டு நிற்கின்றோம்
போட்டி போட்ட சமூகமிது
புறங்கையை நக்கையிலே
பாட்டுப்பாடி மாற்றான் உண்ட
பாத்திரத்தை கழுவுகிறாய்

தரித்திரத்தை விலைபேசி
தந்தவர்கள் நீங்களென்று
சரித்திரம் புகழ்பாடும்
சந்திதி வரவேற்கும்
நரித் தந்திர வாதிகளின்
நற்சான்று பெறுவதற்காய்
பரிந்துரைத்தீர் பதம் பணிந்தீர்
“பச்சோந்தி” மாந்தர்களே!

- கன்னிமுத்து வெல்லபதியான் -

# தூரத்து வெளிச்சம்

மக்களின் மனங்களும்
மக்கள் வாழும்
நில புலங்களும்
தண் மதியாலும்
தாரகைகளாலும்
ஒளி பெற்று விளங்கிய
வானப் பரப்புகளும்
இப்போதெல்லாம்
இருண்டே கிடக்கின்றன
ஜனநாயகத்தின் குரல்கள்
தொடர்ந்தும்
நசுக்கப்படுகின்றன
எங்களின் விழிகளிலிருந்து
“இரத்தம் வழிகிறது”
இருட்டாகத் தான்
எல்லாமே தெரிகிறது........
............“ம்”............
எங்கங்கோ கடல் கடந்த
தொலைதூரங்களில் மட்டும்
“விடிதலுக்கான” சேவல்களின்
செட்டையடிப்புக்களும்
குயில்களின் குரலோசைகளும்.



PUBLIC LIBRARY
JAFFNA

# தமிழ் காக்க வாரீர்......!

- கவிஞர் நிலா தமிழின் தாசன் -

தமிழென்ன சிறுபிள்ளை விளையாட்டுப் பொருளா!
தரைதந்தும் மொழிகாத்த உயர்தோர்தம் உயிராம்
அமிழ்தென்றும் தேனென்றும் ஆன்றோர்கள் சொன்னார்
அதையேனோ நந்தமிழர் மறந்தார்கள் இந்நாள்?

சுவையான மொழிதன்னைப் பிழையாகப் பேசி
சுவை அழியக் களை போலும் பிறமொழிகள் வீசி
அளவற்ற கலப்படத்தால் அருந்தமிழும் சிதைய
அநியாயம் புரிவதென்ன அடிமண்ணுட் புதைய!

"காலை அழகைக்" கழுதைகள் போல் பாவம்
"காளை அலகெனக்" குளறுகின்றார் சாபம்
"வாலைப் பருவம்" என்பதனை மாற்றி
"வாளைப் பறுவமென" அறுக்கின்றார் தீட்டி,

"உலகத்தை," "உளகமாம்" உதைக்கிறார் நெஞ்சில்
"உண்ணுதல் - உன்னுதல்" இது என்ன கஞ்சல்!
"நலம்" என்ற தமிழ் இருக்க "குட்" என்று செப்பல்
"நாய்" தண்னை டோக் என்று மொழிமீது துப்பல்

ஒன்றிரண்டு நூறல்ல ஒரு பாட்டில் சொல்ல
ஒரு நூறு ஆயிரமோ! உரைத்துவிட மெல்ல?
கன்றினோடு பசு கூடக் கதறும் மொழி அம்மா
கனித்தமிழை மறந்தவர்கள் "மம்மி. டடி" என்பார்

மூத்த பழம் பெருமை கொள் ஏடுகளில் கூட
முத்தமிழைச் சிதைப்பது மேன் உளம் மெத்த வாட
காத்தருள்க தமிழ்மொழியைச் செம்மையுடன் ஓங்க
காலத்தின் தேவை நற் கடமை செய்ய வாங்க ........

# உறவுகள் எங்கே?

சிறுகதை

- வாசுகி குணரத்தினம் -

ஆனந்தியின் உறவுகள் பொய்த்துப் போய்க் கொண்டிருப்பது தெரிகிறது. அவளுக்கு இருந்த பாசத்தின் மயக்கம் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவடைந்து கொண்டிருந்தது.

பட்டணத்தில் திருமணம் செய்து வசித்து வரும் கடைசித்தங்கையிடமிருந்து 'போன் கோல்' வந்திருந்தது. "அக்கா நான் பின்னேரம் வாறன் அந்த லோன் போமை வாங்கி வை" என்றாள்.

"நீ வரவேண்டாம் நான் போமை வாங்கிய பிறகு கோல் பண்ணிச் சொல்றன்" என்று கூறி அவள் வரவைத் துண்டித்திருந்தாள் ஆனந்தி தங்கை திருமணம் செய்து கொண்ட புதிதில் வீட்டிற்குக் கணவருடன் ஓடி ஓடி வருவாள். மழை வெயில் என்று பாராமல் குடை பிடித்துக் கொண்டு நனைந்தபடி சைக்கிளில் இருவரும் வந்ததை மறக்க முடியவில்லை. ஆனால் இன்று தங்கையை வரவேண்டாம் எனக் கூறி அவள் வரவைத் துண்டித்து விடுமளவிற்கு உறவில் விரிசல் ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல முடியாது சகோதர பந்தத்தில் களைப்பு ஏற்பட்டுள்ளது தெரிகிறது.

ஆனந்திக்கு இரு தங்கைகள். மூவருமே கெட்டித்தனமாகப் படித்து கல்வியில் ஒரு துறையைக் கைப்பற்றியவர்கள் படிக்கும் காலங்களில் இவர்கள் பிரிந்து இருந்ததைக் கண்டதில்லை. சகோதரிகள் என்று இவர்களை யாரும் அடையாளப்படுத்திக் காட்டுவது கடினமானது. மூவரும் சிநேகிதர்களாகவே உறவாடுவார்கள். ஒளிவு மறைவு என்பது எந்த விடயத்திலும் இருக்க மாட்டாது. எல்லாவற்றையும் வெளிப்படையாகவே கதைத்து உரையாடிச் சிரித்து மகிழ்ந்து இருப்பார்கள். இதைப் பார்ப்பவர்கள் பொறாமை கொண்டதும் உண்டு.

ஒரு சைக்கிள் இவர்களின் கதை சொல்லும் அக்காவை வைத்து தங்கை உளக்குவதும், தங்கையை வைத்து அக்கா சுமப்பதுமாக இவர்களது பட்டணத்துக்கான பயணம் தொடரும். ஆயிரத்தில் ஒருவர் கூட இவர் போன்று உறவு கொண்டதில்லை.

இன்று ஆனந்தி மட்டும் தனியாக அவர்கள் வாழும் வீடு தேடிச் செல்கின்றாள். வெளிப்பூச்சான் கதைகளையும்' உரையாடல்களையுமே அங்கே அவள் காண்கிறாள். தங்கைகள் அன்பானவர்கள், இரக்க குணம் கொண்டவர்கள், பாசம் காட்டுவதில் குறைவில்லாதவர்கள். ஆனால் தற்பொது அவர்களுடன் ஒரு போலித்தனம் கலந்திருப்பதை ஆனந்தி உணர்ந்து கொள்ள வெகு காலம் பிடிக்கவில்லை. போலியான உரையாடல்களைச் சகித்துக் கொள்ளும் அளவுக்கு அவள் பாசம் கலைந்து போனவளில்லை.

கணவன் என்று வந்தவர்களிடம் தனது தங்கைகள் எதைக் கண்டு கொண்டனர் என்பது தான் இவளுக்குப்



"பாய்ந்து பிச்சையெடுப்பவன் மறுப்பை எதிர்கொள்வான்"

புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. காலத்தின் மாற்றங்கள் ஆனந்தியின் பந்த பாசத்துடன் விளையாடிக்கொண்டிருப்பதை அவள் அவதானிக்கத் தவறவில்லை. திருமணம் செய்து கொண்ட புதிதில் ஓடிஓடி வந்தவர்கள், மெல்ல மெல்ல வருவதைக் குறைத்துக் கொண்டார்கள். தேவைகள் அன்றி அவர்கள் வரவு இப்போது இடம் பெறுவதில்லை.

ஓடியோடிப் போய் உறவை வளர்க்கலாம் என ஆனந்தி செய்கின்ற முயற்சிகளும் பயனளிக்கவில்லை. தங்கைகள் மனதில் காணப்படும் மாற்றத்திற்கான காரணங்களைக் கண்டு பிடிக்கவும் முடியாமல் இருந்தது. ஆனால் தங்கைகள் வந்தால் சிரித்துப் பேசுவார்கள் சந்தோஷமாக இருப்பார்கள். அது தங்களது வாசலைக் கடக்கும் வரைதான்.

நல்லதொரு மருமகனைப் பெற்ற சந்தோஷம் பெற்றோருக்கு இருந்தது. அவர்களின் மாற்றங்கள் புரியாத புதிராகவே இருந்து கொண்டிருந்தது.

தாய் கட்டும் சேலையைப் போர்வையாக்கிக் கொண்டு அக்கா தங்கை மூவருமாக உருண்டு புரண்டு படுத்துக் கிடந்ததும். இரவில் கனவுகள் வரும்போது பயந்து கொண்டு ஒருவரை ஒருவர் இறுக்கி அணைத்தபடி கண்ணை மூடிக்கொண்டு பயந்தபடி விடியும்வரை இருந்ததும் இன்று நினைத்துப் பார்க்கும் போது, பீறிட்டுக் கொண்டு வரும் கண்ணீரை அடக்க முடியவில்லை. ஆனந்திக்குக் காலம் காயங்களையெல்லாம் மாற்றிவிடும் என்பது பொய் எனப்பட்டது. அதுவே அவளுக்குப் பல காயங்களை உருவாக்கிக் கொடுத்துக் கொண்டல்லவா இருக்கின்றது.

ஒரு சட்டையை மூவருமாக மாற்றி மாற்றிப் போடுவதும், ஒரு பீங்கானில் உணவெடுத்து மூவரும் உண்டு மகிழ்ந்ததும் எப்படி மறந்து போனது இவர்களுக்கு என்பது புரியவில்லை. இன்று ஆளுக்கொரு குழந்தையை பெற்றுக் கொண்டு உணவூட்டிக் கொண்டிருப்பதில் அவர்கள் காணும் மகிழ்ச்சியை யாருடனும் பகிர்ந்து கொள்ளும் அளவிற்கு அவர்கள் பக்குவம் பெற்றவர்கள் இல்லை. தங்கைகள் சகோதர பாசத்தைக் கொன்றுவிட்டு வாழ்க்கையில் ஜெயித்து விட்டதாக நினைக்கின்றார்களா? அல்லது நமக்கென்று எடுத்துக்கொண்ட இல்லற வாழ்க்கையில் நடித்துக் கொண்டிருக்கிறார்களா என்பதுவும் விளங்கவில்லை.

இவைகளைப் புரிந்தும் புரியாமலும், தெரிந்தும் தெரியாமலும் ஆனந்தி வாழ்ந்து கொண்டிருக்கின்றாள் என்பதைத் தங்கைகள் உணர்ந்து கொள்வார்களா? மாட்டார்களா? அல்லது வாழ்க்கை கற்றுத்தரும் பாடங்களில் இதுவும் ஒன்றா? இதனை ஏற்றுக்கொள்ளப் பழகிவிட வேண்டுமா? அதற்கு இணங்கி விட வேண்டுமா? என்பது விளங்காமல் லோன் போமை பெற்றுக் கொள்ள வந்த தங்கையை வரவேற்க வாசலுக்குச் செல்கின்றாள் ஆனந்தி.

# கற்பிழந்த பூமி

- கவிஞர் சூரியன் -

பொஸ்பரஸ் புழுதி
தசைகளின் சகதி
கந்தகக் காற்று
உதிரத்தால் ஊற்று

நாறிப்போய்க் கிடந்தது
நந்திக் கடல் – அதன்
சிவப்பை எண்ணிச் சிலிர்த்தது
செங்கடல்

அவர்கள்!
நாறிய பிண மணத்தை
நறுமணமாய் நுகர்ந்தார்கள்
பேய்களுடன் போட்டியிட்டு
பிணங்களின் மேலே நடாந்தார்கள்
தங்கத்தினைக் குறி வைத்து
அங்கத்தினைத் தறித்தார்கள்
வடக்கின் வசந்தம் என்றே
வானம் பார்த்துச் சிரித்தார்கள்

குற்றுயிராய்க் கிடந்த என்னை
சுற்றியே வளைத்தார்கள்
ஆடையினைப் பாய்ந்து பிய்த்து
அம்மணமாய்க் களைந்தார்கள்
மார்பினைக் கிழித்தறுத்து
வரிப்புலி என்றார்கள்
மண்புதைய என்னைப் போட்டு
வன் புணர்ந்து தின்றார்கள்

கோடரிக் காம்பொன்றும் என்னைக்
கூடிக் களைத்தது.
சன நாயகம் என்றே இதையும் அச்
சாக்கடை நினைத்தது.
அன்புதான் அனைத்தும் என்று
அசோகனுக்கு மதி உரைத்தவன்போல்
அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டு
இங்கேயும் ஒருவன் வந்தான்.

கத்தி இல்லை
ரத்தம் இல்லை
காவியுள் சில சிலை
கை நிறைய மரக்கிளை

"அமைதி" என்று சொன்னான்
அருகிலே வந்தமர்ந்தான்
சிலையாலே தன் சிரசைச் சிதைத்தான்
மர்ம உறுப்பினுள் மர(த்)த்தைப் புதைத்தான்

புரிந்து புலன் அடங்கு முன்னே
புல்லரித்தது தேகம்
போதி மாதவனின் சிலை!
புனித மரக்கிளை!





PUBLIC LIBRARY
JAFFNA

# கலைக்கதிர்

## கலாபூசணம் ஆரையூர் அருள்

மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் திரு.மூத்ததம்பி அருளம்பலம் (ஆரையூர் அருள்) அவர்கள் கலை இலக்கியத்திற்காக பல்வேறுபட்ட சேவைகளை ஆற்றியுள்ளார் தெய்வீகப் பாடல்களை மெய்சிலிர்க்க இயற்றும் ஆரையூர் அருள் அவர்களை கதிரவன் சார்பில் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். கவிதை, கதை, கட்டுரை, நாடகம், நாட்டுக்கூத்து ஆகிய துறைகளில் ஆற்றல்மிக்க சகலகலாவல்லவனாகிய ஆரையூர் அருள் பற்றிய சில குறிப்புக்கள் இப்பகுதியில் இடம் பெறுகின்றது.



**கவிதைகள்**

01. கிழக்கொளி (ஒளி-2) 1992 "பாரதி மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று"
02. கிழக்கொளி (கதிர் 4 1999) "வித்தகன் விபுலானந்தன்"
03. ஒளி - சஞ்சிகை (ஆடி 1996) "ஒற்றுமைக் கரவொலி ஒலிக்கட்டும்"
04. "தமிழ் மணி" அன்பு மணி பாராட்டு விழாச் சஞ்சிகை "இசை பாட வாருங்கடி, எங்கள் அன்பு மணி"
05. சிகரம் - சஞ்சிகை (2003) "மண்முனைப் பற்றுச் சிறப்பு"
06. சிகரம் - சஞ்சிகை (2009) மண்முனைப்பற்றுச் சாகித்திய விழா வெளியீடு "கவி"
07. கதிரவன் - சஞ்சிகை (2009) கவிதை
08. கதிரவன் -சஞ்சிகை (2010) சிறுவர் உரிமை - கவிதை

**சிறுகதை**

01. 1986ம் ஆண்டு "அவள்" - 01ம் பரிசு - (பட்டிருப்புக் கோட்டம்)
02. 2000ம் ஆண்டு "சமுதாய தராசு" (தினக்கதிர்)
03. 2003ம் ஆண்டு "மாணவர் மையக் கல்வி" குரு களம்" - சஞ்சிகை

**நாடகங்கள்**

01. 1984ஆம் ஆண்டு "அளவான குடும்பம்" சமூக நாடகம் - 01ம் பரிசு (அம்பாறை மாவட்டம்)
02. 1992ம் ஆண்டு "தியாக தீபம்" சமூக நாடகம் - 01ம் பரிசு (மண்முனை தென்மேற்கு பிரதேசம்)
03. 2002ம் ஆண்டு "உண்மை விளங்குது" சிறுவர் நாடகம் - 2ம் பரிசு (மண்முனைப்பற்றுக் கோட்டம்

**நாட்டுக்கூத்து**

01. 1974ம் ஆண்டு "வள்ளி திருமணம்" வடமோடி (பொலநறுவை முத்துகல் தமிழ் மகா வித்தியாலயம்)

02. 1981ம் ஆண்டு "வாலி வதம்" வடமோடி (இலங்கை வானொலியில் ஒலிபரப்பு செய்யப்பட்டது)

03. 1983ம் ஆண்டு "பணச் செருக்கு" வடமோடி (நவீன நாட்டுக் கூத்து) (பொத்துவில் மெ.மிசன் வித்தி)

04. 1992ம் ஆண்டு "வழி தவறிய வஞ்சி" வடமோடி (நவீன நாட்டுக்கூத்து)

05. 1993ம் ஆண்டு "அனுமன் கண்ட சீதை" (வடமோடி)

06. 1994ம் ஆண்டு "மங்கள தீபம்" இருமோடி (நவீன நாட்டுக்கூத்து)

07. 1997ம் ஆண்டு "மறலியை வென்ற மங்கை" தென்மோடி கூத்து -01ம் பரிசு (மண்முனைப்பற்று பிரதேச செயலகம்)

08. 1997ம் ஆண்டு "சுந்தரி விடு தூது" தென்மோடி - 01ம் பரிசு (தமிழ் மொழித் தினம்) - வடகிழக்கு மாகாண சபை)

09. 1998ம் ஆண்டு "இரணிய சங்காரம்" தென்மோடி - 01ம் பரிசு (தமிழ் மொழித் தினம் - வடகிழக்கு மாகாண சபை)

10. 2002ம் ஆண்டு "குருதட்சனை" வடமோடி - 02ம் பரிசு (மட்டக்களப்பு வலயம்)

**ஒலிப்பேழை (இறுவட்டு) வெளியீடு)**

01. 1992ம் ஆண்டு மட்/ஆரையம்பதி சிவனேஸ்வரர் ஆலயம் (காவடி, ஊஞ்சல்)

02. 1993ம் ஆண்டு/ஆரையம்பதி கண்ணகி அம்பாள் ஆலயம் (கும்மி, தாலாட்டு, பக்திப்பாடல்கள்)

03. 1994ம் ஆண்டு மட்/ஆரையம்பதி பேச்சியம்பாள் ஆலயம் (காவடி, கும்மி, தாலாட்டு, கரகம், காவியம்)

04. 1995ம் ஆண்டு மட்/ ஆரையம்பதி செல்வாநகர் காளி கோயில் (தாலாட்டு, கும்மி, ஆக்கப்பாடல்கள்)

05. 1996ம் ஆண்டு மட்/ஆரையம்பதி வம்மிக்கேணி மாரி அம்பாள் ஆலயம் (கரகம், காவடி, தாலாட்டு, ஆக்கப்பாடல்)

06. 1997ம் ஆண்டு மட்/கோளாவில் மாரியம்பாள் ஆலயம் (காவடி, கும்மி, ஆக்கப்பாடல்)

07. 2001ம் ஆண்டு மட்/ஆரையம்பதி வடபத்திரகாளி கோயில் (புதிய ஆக்கப்பாடல், காவியம்)

08. 2002ம் ஆண்டு மட்/ மஞ்சந்தொடுவாய் வீரபத்திரர் காவியம்

கலை இலக்கிய சேவையினை ஆற்றிவரும் ஆற்றல்மிக்க படைப்பாளிகளை கௌரவப்படுத்தும் "கலைக்கதிர்" பகுதிக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்பிவையுங்கள் (ஆ+ர்)

# செய்திக் கதிர்

சமகால நிகழ்வுகள், கலை கலாசார விழாக்கள், மக்கள் மேம்பாட்டுக் கருத்துக்கள், அபிவிருத்தித் திட்டங்கள், விழிப்புணர்வு செயற்பாடுகள் அனைத்தையும் கதிரவனின் "செய்திக்கதிர்" பகுதிக்கு அனுப்பி வையுங்கள்.

## வெளியீட்டுவிழா

கவிஞர் குறிஞ்சிவாணனின் "துயரம் சுமக்கும் தோழர்களாய்" கவிதை நூல் வெளியீட்டு விழா 06.10.2011 சனிக்கிழமை மு.ப. 9:00 மணிக்கு திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திரு கண.இராசரெத்தினம் (பணிப்பாளர் - திருநாவுக்கரசு நாயனார் குருகுலம், தம்பிலுவில்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலக பிரதேச செயலாளர் திரு.வி. அழகரெத்தினம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

## சிறுவர் கலாசார நிகழ்வு - 2011

சர்வதேச சிறுவர் தினத்தைச் சிறப்பித்து புதுக்குடியிருப்பு சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழு நடத்தும் "சிறுவர் கலாசார நிகழ்வு" 05.10.2012 புதன்கிழமை பி.ப. 03:01 மணிக்கு கதிரவன் பாலர் பாடசாலை வளாகத்தினுள் இடம் பெற்றது. "நாட்டைக் காப்பது போல் உங்களதும் எங்களதும் சிறுவர்களைப் பாதுகாப்போம்". எனும் மகுட வாசகத்திற்கு அமைவாக இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறுவர் கலை நிகழ்வுகள் மற்றும் கலாசார விளையாட்டுக்கள் என்பன மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

## "அமைதியின் புன்னகை"

திரு.முகில்வாணன் அவர்களின் "அமைதியின் புன்னகை (சொற்கோலம்) நூல் வெளியீட்டு விழா 17.09.2011 சனிக்கிழமை பி.ப. 3:00 மணிக்கு மட்டக்களப்பு வில்லியம் ஓல்ற் மண்டபத்தில் அல்ஹாஜ் தேச கீர்த்தி முஹம்மட் முஸம்மில் காதர் (சமாதானம்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலாநிதி ரி.ஜெயசிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர் - விஞ்ஞானபீடம், கிழக்குப்பல்கலைக் கழகம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

## 4வது "விழி" சிறப்பு மலர் வெளியீட்டு விழா

மண்முனைப்பற்று பிரதேச சிறுவர் கண்காணிப்புக்குழு நடாத்தும் சர்வதேச சிறுவர்தின விழாவும், சிறுவர் ஆக்கங்களும் அடங்கிய 4வது "விழி" சிறப்பு மலர் வெளியீடும் 2011.10.25 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9:01 மணிக்கு ஆரையம்பதி நந்தகோபன் கலாசார மண்டபத்தில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர்

திரு.கோ.தனபாலசுந்தரம் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு.மு.விமலநாதன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். மற்றும் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திரு.கே.எம்.புவிதரன் அவர்கள் இந்நிகழ்வினை முன்னிட்டு சிறப்பாக நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## ஜேர்மனி மலைமகளின் காதலெனும் சோலையிலே

மட்/மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை செங்கதிர் வாசகர் வட்டத்துடன் இணைந்து நடாத்தும் ஜேர்மனி மலைககள் "காதெலெனும் சோலையிலே" புத்தக வெளியீட்டு விழாவும் எழுத்தாளர் ஒன்று கூடலும் 19.08.2011 வெள்ளிக்கிழமை மாலை 05:00 மணிக்கு மட்/ அமெரிக்கன் மிஷன் மண்டபத்தில் கவிஞர் செங்கதிரோன் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மூத்த எழுத்தாளர் அன்புமணி அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

## நாடகவிழா - 2011

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மண்முனைப்பற்று பிரதேச செயலகம் நடாத்தும் நாடகவிழா 29.08.2011 திங்கட்கிழமை மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலய மண்டபத்தில் முற்பகல் 09:30 மணிக்கு பிரதேச செயலாளர் திரு.கோ.தனபாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்றது. கௌரவ மாகாணசபை உறுப்பினர் (கிழக்கு) திரு.பூ.பிரசாந்தன் பிரதம அதிதியாக பங்குபற்றிய இவ்விழாவில் கதிரவன் கலைக்கழகத்தின் "அரண்மனையும் அந்தப்புரமும்" யுகாகலா மன்றத்தின் "பாழடைந்த நெற்றி" ஆகிய இரண்டு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

## கதிரவன் கதிர் - 09 வெளீட்டு விழா

கதிரவன் கலைக்கழகம் வெளியிடும் கதிரவன் சஞ்சிகை கதிர் 09 (ஆடி - புரட்டாதி 2011) வெளியீட்டு விழா கதிரவன் ஆசிரியர் த.இன்பராசா தலைமையில் மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலய ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு.சீ யோகேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். சஞ்சிகை பற்றிய கருத்தினை ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் திரு.மு.தவராசா அவர்கள் வழங்கி வைத்தார்.

## பழந்தமிழ் நடுகற் பண்பாடு

கலாபூஷணம், ஆய்வார்வலர் திரு.நா.நவநாயகமூர்த்தியின் "பழந்தமிழர் நடுகற்பண்பாடு" நூல் அறிமுக நிகழ்வு செங்கதிர் இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில்



PUBLIC LIBRARY
JAFFNA

கவிஞர் செங்கதிரோன் தலைமையில் 27.08.2011 சனிக்கிழமை மட்/பொதுநூலக மண்டபத்தில் இடம்பெற்றது. தொல்லியல் ஆய்வாளர் செல்வி.க.தங்கேஸ்வரி பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் நூல் நயவுரையினை திரு.மு.தவராசா (மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்) அவர்கள் வழங்க நூலாசிரியர் பற்றிய அறிமுகத்தினை அன்புமணி அவர்கள் வழங்கிவைத்தார்.

## உயிரோவியம் கவிதை நூல் வெளியீட்டு விழா

கவிஞர் சிற்றிதழ் ஆசிரியர் சதாசிவம் - மதன் அவர்களின் உயிரோவியம் கவிதை நூல் வெளியீட்டுவிழா 28.08.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் கதிரவன் சஞ்சிகை ஆசிரியர் திரு.த. இன்பராசா தலைமையில் இடம்பெற்றது இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.பா.அரியநேந்திரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். நூலாய்வினை கவிக்கோவெல்லவூர் கோபால் நிகழ்த்த நூலின் முதற் பிரதியினை திருமதி யோகேஸ்வரி - கிருஸ்ணமூர்த்தி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

## 15ஆவது சிறப்பு மலர்

தென்றல் சஞ்சிகையின் 15ஆவது சிறப்பு மலர் வெளியீட்டு விழா 24.09.2011 சனிக்கிழமை முற்பகல் 9:30 மணிக்கு மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் 'தென்றல்' ஆசிரியர் திரு.க.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக தொல்லியல் ஆய்வாளர் செல்வி.க.தங்கேஸ்வரி அவர்கள் கலந்து சிறப்பித்தார். சஞ்சிகை முதற்பிரதியினை மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் பொருளாளர் திரு.வி.றஞ்சிதமூர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

## வெளியீட்டு விழாவும் சிறுவர் அரங்கும்

மாவை நித்தியானந்தனின் சிறுவருக்கான ஆக்கங்கள் சின்ன சின்ன நாடகங்கள் (நாடகங்கள்), சட்டியும் குட்டியும்( நாடகங்கள்), நாய்க்குட்டி ஊர்வலம் (நாடகங்கள்) சின்னச் சின்னக் கதைகள் (கதைகள்) பாப்பா பாரதி (சிறுவர் வீடியோ) முதலியவற்றின் வெளியீட்டு விழா மட்/ பொதுநூலக கேட்போர் கூடத்தில் 13.08.2011 சனிக்கிழமை பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. மட்டக்களப்பு பொது நூலக வாசகர் வட்டம், செங்கதிர் இலக்கிய வட்டம் குமரன் புத்தக இல்லம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து நடாத்திய மேற்படி நிகழ்விற்கு மட்டக்களப்பின் மூத்த எழுத்தாளர் அன்புமணி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

## செல்லக்கிளி நாவல்

முகில் வண்ணனின் செல்லக்கிளி (நாவல்) வெளியீட்டு நிகழ்வு 11.09.2011

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மட்/பொதுநூலக மண்டபத்தில் அன்புமணி அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. செங்கதிர் இலக்கிய வட்டமும், மட்/பொதுநூலக வாசகர் வட்டமும் இணைந்து நடாத்திய இந்நிகழ்விற்கு தொல்லியல் ஆய்வாளர் செல்வி.க.தங்கேஸ்வரி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். நாவல்பற்றிய நயவுரையினை திருமதி. ரூபி வலன்ரினா பிரான்சிஸ் அவர்கள் வழங்கிவைத்தார்.

---

# அறிவுக்கதிர்



தயாபரம் - கிரிதாரணி

- ஆஸ்திரேலியாவில் வாழும் "கூக்குபரா" என்ற பறவை மனிதர்களைப் போன்று சிரிக்கக் கூடியது.
- "சாலமன்" என்ற மீன் நீரோடும் திசையில் நீந்தும்போது பின்புறமாகவே நீந்தும்.
- வடகடல் பகுதியில் வாழும் "சிவப்பு மார்பு டைவர்" என்ற பறவை குழந்தை போல் அழும்.
- கால்ப் என்ற கூல் சிப்பிக்கு 100 கண்கள் இருக்கின்றன.
- ஹம்மிங் பேர்றா என்ற பறவை பின்புறமாக பறக்கும் சக்தி கொண்டது.
- பிறந்தது முதல் இறக்கும் வரை எறும்புகள் தூங்குவது இல்லை.
- இங்கிலாந்தில் உள்ள பார்லி என்ற பறவை தொலைபேசி மணி போல் சிணுங்கும் திறன் கொண்டது.
- மனிதனின் பார்வைத் திறனை விட ஆந்தையின் பார்வைத் திறன் 82 மடங்கு அதிகமானதாகும்.
- கேட்டிடிட் எனப்படும் ஈக்களுக்கு காதுகள் அவற்றின் முன்னங் கால்களில் அமைந்துள்ளன.
- கண்கள் இருந்தும் பார்வை இல்லாத உயிரினம் வெளவால் ஆகும்.
- நீல நிற வாத்து குளிர்கால இடப் பெயர்ச்சியின் போது 2700 கி.மீ தூரத்தினை 60 மணி நேரத்தில் கடக்கிறது.
- பருந்து ராகாளி என்பவற்றின் வேகம் 100-120 கி.மீ ஆகும்.
- கூ எனப்படும் வாத்து 8700 மீட்டர் உயரம் வரை பறக்கக்கூடியது.
- ஆண் குயிலின் குரல் மட்டுமே இனிமையானது.
- மண்புழு முன்னும் பின்னும் நகரக்கூடியது.
- குஞ்சுகளுக்கு பாலூட்டக் கூடிய ஒரே பறவை சம்காதட் ஆகும்.
- கறையான் ஒரு நாளைக்கு 80000 முட்டைகள் வரை இடும்.

- எறும்புகளால் சாதாரனமாக உணவின்றி 100 நாட்கள் வரை உயிர் வாழ முடியும்.
- கடல் விவசாயம் என்று சிறப்பித்துக் கூறப்படும் தொழில் இறால் வளர்ப்பு ஆகும்.
- இறக்கை இல்லாத பறவை கிவி ஆகும்.
- சிப்பி ஒரு வருடம் ஆணாக இருக்கும் அடுத்த வருடம் பெண்ணாக மாறிவிடும்.
- மீன்கள் தூங்கும் போது அவற்றின் கண்கள் திறந்திருக்கும்.
- ஒரு நெருப்புக் கோழியின் முட்டை பன்னிரண்டு பேர் சாப்பிடும் அளவு பெரியது.
- ஈ, எறும்பு முதலிய பூச்சிகளுக்கு கேட்கும் சக்தி இல்லை.
- வீட்டில் வளர்க்கும் புறாவானது மணிக்கு 94.2 மைல் வேகத்தில் பறக்கக் கூடியது.
- கடல் தாவரங்கள் 45.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி விட்டன.
- முதல் மீனான நட்சத்திர மீன் தோன்றி 5 கோடி வருடங்களுக்கு முன் தோன்றி விட்டன.
- 3 கோடியே 45 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே கடலில் மீன்கள் தோன்றின.
- மனிதன் தோன்றி 15 இலட்சம் வருடங்கள் ஆகின்றன.

# கதிரவன் வாசகர்

## கதிரவன் சஞ்சிகைக் கட்டுரைக்கு மறுப்புரை

- ஆரையம்பதி க. சபாரெத்தினம் -

கதிரவன் சஞ்சிகை இல. 09 2011இல் பக்கம் 26 தொடக்கம் 29 வரை உள்ள இடப்பரப்பில் செல்வி க. தங்கேஸ்வரி பி.ஏ(ஆனஸ்) தொல்லியல் சிறப்பு அவர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ள "**முக்குல (முக்குவ) அரசி உலகநாச்சி மண்முனை அவளது இராசதானி**" என்ற தலைப்பில் அமைந்த ஆய்வுக்கட்டுரையில் காணப்படும்அதீத கற்பனைக் குறிப்புகளையும் தொடர்பற்ற விதத்தில் தொகுக்கப்பட்டுள்ள விடயசாரங்களையும் படித்த போது அதற்கான மறுப்புரை எழுத வேண்டும் என்ற ஆதங்கத்தால் இக் கட்டுரையை வரைந்தனுப்பிவைக்கிறேன்.

பந்தி 03 வரிகள் 01- 06 வரையான பதிவுகளின் அடிப்படையில் முக்குவர் என்போர் யார்? அவர்களது பூர்வீகம் என்ன? மட்டக்களப்பு வரலாற்றில் முக்குவரின் இடம் எத்தகையது? என்பவற்றை மையமாக வைத்து எழுதப்படவேண்டிய நோக்கு

டன் ஆரம்பித்த இந்த ஆய்வக்கட்டுரை தலைப்பில் முக்குல (முக்குவ) என்று தொடங்கும் நிச்சயமற்றதோர் தன்மை வெளிப்பட்டு நிற்பதானது இறுதிவரை ஐயங்களைத் தீர்த்து வைக்கும் வகையில் எழுதப்பட்டிருக்கவில்லை.!

கட்டுரையின் 3ம் பந்தியில் "**உலகநாச்சி தேவைப்பட்ட போது பலதடவைகள் பலகுடும்பங்களை அழைப்பித்துக் குடியேற்றினாள். அவர்கள் வெவ்வேறு சமூகத்தவராய் இருந்தாலும் அக்காலத்தில் முக்கியம் பெற்ற குடியினர் மூவர். அந்த முக்குலத்தோரின் பெயராலேயே முக்குலம் என வழங்கப்பட்ட உலக நாச்சியின் சமூகம் காலவோட்டத்தில் முக்குலர், முக்கியர், முக்குவர் என்று பல பெயர்களைப் பெற்றது.**"என்று கூறப்பட்டுள்ளதை எடுத்த நோக்கும் போது அதன் மூலம் எமக்கு சில தடுமாற்றங்கள், சந்தேகங்கள், நம்பகமற்ற தன்மைகள் வெளிப்பட்டு நிற்கின்றன.

உலகநாச்சி ஒரிசா தேசத்து மன்னான குகசேனனின் மகள் என்பதில் எவ்விடத்தும் கருத்து வேற்றுமை இல்லை. ஆகவே உலகநாச்சி அரசவம் சத்தைச் சேர்ந்தவள் சத்திரிய குலத்த வள் தந்தையின் பெயர் முன்னள் வரும் "குக" என்ற சொல்லை மட்டும் வைத்துக் கொண்டு அவளை முக்குவவம்சம் என்று கூறும் ஆய்வு வரவேற்கக்கூடியதா? மேலும் இதனகத்து "**பல்வேறு சமூகத்தவர்**" என்று குறிப்பிடப்பட்டுள்ளது யாரை? அல்லது எவரை? அவர்கள் வெறுவேறு இனங்களா? அல்லது ஒரே இனத்திற்குள் அடங்கும் வேறு குலகோத்திரங்களா? இது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. அடுத்து "**முக்கியம் பெற்ற குடியினர் மூவர்**" என்று வரும் சொற்றொடர் குறித்துரைக்கும் அந்த முக்கியம் பெற்ற குடியினர் யார் என்று புரியாதவரை விடயம் குழப்பாகவே இருக்கிறதல்லவா? சரி கட்டுரை கூறும் பொருளுக்கே வருவோம் அப்படியானால் முக்குவர் என்போர் ஒரு தனிக்கோத்திரமல்லாதோர் "**குலக் கூட்டணியினரா?**" இது நிஜவாழ்வு நிலைக்குப் பொருத்த முடையதா? அன்றியும் **சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் குடிமரபினரை** பெருமைப்படுத்தும் நோக்கோடு தொடங்கி இவ்வாறு நிச்சயமற்ற தன்மைக்கு கொண்டு விடலாமா? இது ஒரு புறமிருக்க "**பல தடவைகள், பல குடும்பங்களை இந்தியாவிலிருந்து வரவழைத்து மண்முனையில் குடியேற்றிய**" என்ற ஒரு காரணத்தை மட்டும் வைத்துக் கொண்டு உலக நாச்சியும் அதே வம்சத்தைச் சேர்ந்த ஒரு முக்குல மாது என்று கூறமுயலுவது முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க நினைக்குமோர் சிறுபிள்ளைத் தனமான கூற்று என்று கருதுவதில் நியாயம் உண்டல்லவா?

அதேசமயம் இக்கட்டுரையின் 13வது பந்தியில் ஆசிரியை குறிப்படும் போது மகாவம்சத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளதென்கிறார். "மேகவர்ணன் ஆட்சியின் போது (கி.பி 301 - 308) பிராமணப் பெண்ணொருத்தி சிவலிங்கத்தையும் புத்தரது தசனத்தையும் கூந்தலுக்குள்



"**தொழிலில் (வேலையில்) இருப்பவர்களுக்கு கண்ணீர் விட நேரமில்லை**"

PUBLIC LIBRARY JAFFNA

மறைத்து வைத்துக்கொண்டு இலங்கைக்கு வந்ததாகவும் மேகவர்ணன் மட்டக்களப்பில் காடடந்த ஒரு நிலப்பரப்பை அவளுக்கு கொடுத் தான்...."

மேலே மகாவம்சம் குறித்துரைக்கும் பிராமணப்பெண்ணும் தங்கேஸ்வரி அவர்கள் கூறும் முக்குலவரசி உலக நாச்சியும் ஒருவரே அன்றி வேறல்ல என்பதை சிறுபிள்ளை கூட இதனை வாசிக்கும் போது புரிந்து கொள்ளும். ஆகவே தங்கேஸ்வரி இவரை முற்குல அரசி என்று தற்றுணிபின் பேரில் தாபிக்க முயல்வது வேடிக்கையானது மட்டுமல்ல வியப்புக்குறியதுமல்லவா? செல்வி க.தங்கேஸ்வரி ஒரு பி.ஏ.ஆனால் பட்டதாரி என்பதிலும் பார்க்க ஏகோபித்த சிங்கள பௌத்த சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மகாவம்சத்திற்கு வலு அதிகம். அத்தோடு இவ்வாறான புகழ் பெற்ற ஆதார ஆவணத்தில் குறிப்பிடப் பட்டுள்ள கருத்தை முறியடிப்பதற்கு அதனிலும் செல்வாக்குச் செறிந்தோர் சான்றாதாரத்தினாலன்றோ அது இயலும். சும்மா வெறுமனே மனம்போன போக்கிலெல்லாம் ஆய்வுகளை நிகழ்த்திவிட்டு இதுதான் நிதர்சனம் என்று கூறமுற்படுவதனால் ஆய்வாளரின் ஆற்றலை மட்டுமல்ல அவரது ஆக்கங்களையும் மலினப்படுத்திவிட வாய்ப்புண்டு.

## நவமான 09 கதிரவன்

**- கவிஞர் -நிலாதமிழின் தாசன்-**

கண் கவரும் வண்ணத்தில் கண்ணகித்தாய் முகப்பில்! தமிழறிஞர் சிவத்தம்பி ஐயாவும் இணைப்பில்! "நவமான" கதிரவன் நயமாக மலர்ந்தான் நம்பிக்கையில் சுவை பொங்கும் இதழாகத் தவழ்ந்தான்.........

அமரர் பேராசிரியர் சிவத்தம்பி பற்றிய, பேராசிரியர் செ. யோகராசா வரைந்த கட்டுரை, மற்றும் முக்குல அரசி உலகநாச்சி பற்றிய க. தங்கேஸ்வரியின் வரலாறு வரைந்த கட்டுரை, திரு. செ. குணரெத்தினம் அவர்கள் வரைந்த சிறுகதை, கவிதை கள், அறிவுக்கதிர், ஒவ்வொரு தாளின் அடியிலும் காணப்படும் பொன் மொழிகள்... இவைகள் கனமானதால் தான் அடியில் (பணிவில்) காணப் படுகின்றன போலும், அத்துடன் த. இன்பராசாவின் பரிசுபெற்ற "அரிச்சந்திர மயான காண்டம்" தம்பிலுவில் ஜெகாவின் ஔவையார் பற்றிய குறிப்பு, செய்திக்கதிர் என ஆக்கங்கள் யாவும் அபாரம், வழமையைவிட அச்சுவடிவமும் "அச்சா" என மெச்சும்படி அமைந்திருப்பதைப் பாராட்டாமல் விடமுடியாது.

எனவே! கதிரவன் நிச்சயமாக நிலைத்து நின்று கச்சிதமாக கதிர்ப்பரப்புவான் என நம்பலாம், கதிரவனுக்கு வாழ்த்துக்கள்.



"சரியாகச் செய்யாத வேலையை இருமுறை செய்ய வேண்டும்"

சிரிகதை

# (÷)அரணையும் (x)தரையும்

- கலாபூஷணம் கா. சிவலிங்கம் -

பாடசாலை. 5ம் தரம் வரைக்குந் தான் அங்கு வகுப்புக்கள் உள்ளன. நேரம் 9.00 மணி ஒரு பாடம் முடிந்து அடுத்த பாடம் தொடங்கப் போகிறது. அதற்காக மணியும் அடிக்கப்பட்டது. கணித பாடம் எடுப்பதற்காக ஒரு ஆசிரியை 4ம் வகுப்பிற்கு வருகை தந்தார். மாணவர் கள் எழுந்து "குட்மோணிங் ரீச்சர்" என்றதும் பதிலுக்கு ஆசிரியையும் "குட்மோணிங் பிள்ளைகள் . இருங்கள்" என்றார். மாணவர்களும் தத்தம் கதிரைக ளில் அமர ஆசிரியையும் தமது கதிரையில் அமர்ந்தார். வகுப்பு அமைதியாக இருந்தது. சிறிது நேரத்தில் ஆசிரியை எழுந்து வந்து மாணவர்கள் முன் நின்றார்.

"இன்றைக்கு உங்களுக்குப் புதுக் கணக்குச் சொல்லித் தரப்போறன் கூட்டலும் கழித்தலும் உங்களுக்கு நல்லாத் தெரியும். இன்றைக்குப் பெருக்க லும் பிரித்தலும்சொல்லித் தரப்போறன்" என்று கூறியவாறு வெண்கட்டியுடன் கரும்பலகைக்கருகில் ஆசிரியை சென்றார். "எல்லாரும் கரும்பலகையைப் பாருங்க என்று கூறியவாறு தரையை(X) எழுதினார். "இது என்ன?" " என்று கேட்க மாணவர்கள் எல்லோரும் ஒரே குரலில் "பிழை ரீச்சர்" என்றனர். நீங்க சொன்னது தான் பிழை" என்று ஆசிரியை கூறியதும் "நீங்க எங்களுக்கு இப்படித்தானே ரீச்சர் பிழை போடுவீங்க" என்றான் ஒரு மாணவன். "இது தான் தரை. பெருக்கல் அடையாளம். பிழைக்கும் இதே அடையாளம் தான் பெருக்கல் என்றால் என்ன? பெருகிற; பெருகிற என்றால் கூடுற. (2X5 கரும்பலகையில் எழுதிவிட்டு) இது என்ன?" என்று ஆசிரியை கேட்டதும் எல்லா மாணவர்களும் "இரண்டு தரை ஐந்து ரீச்சர் " என்றனர். "ஆ..வெரி குட். தரையை நாம தரம் எண்டும் சொல்லலாம். இரண்டு தரை ஐந்து எத்தனை?" ஒரு கையில் ஐந்து விரல்கள் இரண்டு கையிலும்எத்தனை விரல்கள் ?. ஆசிரியர் கேட்டதும் "பத்து விரல்கள் ரீச்சர்" என்று எல்லா மாணவர்களும் விடையளித்ததும் ஆசிரியை "வெரி குட்". அப்ப இரண்டு தரை ஐந்து சமன் பத்து (2x5 =10 கரும்பலகையில் எழுதிவிட்டு) சரி அப்ப 3x5= எத்தனை" என்று ஆசிரியை கேட்டதும், சிறிது நேரத்தின் பின் எல்லா மாணவர்களும் "15 ரீச்சர்" என்று விடையளித்ததும் ஆசிரியை "வெரிகுட். இப்ப உங்களுக்குப் பெருக்கல் நல்லாத் தெரியும். பெருக்கல் வாய்ப்பாடு கொப்பிக்குப் பின் பக்கம் இருக்கு. அதெல்லாத்தையும் நீங்க பாடமாக்க வேணும்". என்று கூறிவிட்டுப் பிரித்தலைப் படிப்பிக்கத் தொடங்கினார்.



"திறமையான தச்சன் குறைந்த வெட்டுக்களையே வெட்டுவான்"

"இனி பிரித்தால் கணக்கு எப்படிச் செய்யிறதெண்டு பாப்பம். (÷ எழுதி விட்டு ) இதுதான் பிரித்தல் அடையாளம். அரணை. (10 ÷ 2 எழுதிவிட்டு) 10 அரணை 2 என்றால் பத்தை இரண்டால் பிரித்தல் எத்தனை? என்று ஆசிரியை கேட்டதும் எவரும் விடையளிக்க வில்லை. அதனால் "இரண்டு கைகளிலும் பத்து விரல்கள் இருக்குது. அவற்றை இரண்டாகப் பிரித்தால் ஒரு கையில் எத்தனை என்று ஆசிரியை கேட்டதும் "5 விரல்கள் ரீச்சர்" என்று ஒருமித்து விடையளிக்க ஆசிரியையும் "வெரி குட், இப்போ பிரித்தலும் உங்களுக்குத் தெரியும்." என்று ஆசிரியை கூறியதும் "ரீச்சர் ! கடிச்சுப் போட்டுது ரீச்சர்" என்று ஒரு மாணவன் கதறியழத் தொடங்கி னான். ஆசிரியை "என்ன கடித்தது"என்று பரபரப்புடன் கேட்க அம்மாணவன் "அரணை ரீச்சர்" என்று மேலும் விம்மிய ழுதான். மாணவர்கள் எல்லோரும் அச்சத்தில் அவசர அவசரமாக எழுந்து தத்தம் கதிரைகளில் ஏறி நின்று "அரணை எங்கே?" என்று கேட்டதும் "ஓடுது? ரீச்சர்" என்றான் கண்களைக் கசக்கி அழுது கொண்டு "எங்கே ஓடுது?" என்று கேட்டார் ஆசிரியை. "தரையில் ஓடுது ரீச்சர்" என்றான் கடி வாங்கிய மாணவன்.

## கதிரவன் புலமைக்கதிர் (தி.நாகநாதன் - ஆசிரியர்)

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. **கொள்ளை அழகு** என்பதன் பொருள் யாது?

1. பொருத்தமான அழகு 2. மிகுந்த அழகு 3. பொருந்தும் அழகு 4. பறிபோன அழகு

2. **"இராமன் நல்ல குணம் படைத்தவன்"** இதில் குணம் என்பதன் ஒத்த கருத்து

1. தன்மை 2. நிலமை 3. மனம் 4. மணம்

3. பலாவுக்குச் சுளை போல கற்றாளைக்கு

1. குட்டி 2. உள்ளீடு 3.சோறு 4. சதை

4. குரைக்கிற நாய் ஒரு போதும் கடிக்காது "ராஜா" என்ற நாய் கடிக்கும் ஆகவே

1. ராஜா சில சமயம் குரைக்கும் 2. ராஜா குரைத்துக் கொண்டு கடிக்கும்
3. ராஜா குரைக்காது 4. ராஜா கடிக்கும்

5. பெயராகவும் வினையாவும் வரக் கூடிய சொல் பின்வருவனவற்றில் எது?

1. பந்து 2. அலை 3. தேன் 4.கல்

6. உயர்திணை ஒருமை தன்மையாக வரும் சொல் பின்வருவனவற்றில் எது?

1. பறந்தது 2. அவன் 3. நான் 4.அவள்

7. கடையில் உள்ளது வடையில் இல்லாதது, கட்டிலில் உள்ளதும் பாத்தியில் இல்லாததும் குடுவையில் உள்ளது குவலையில் இல்லாதது அது என்ன?

1. கட்டி 2. கட்டு 3. கல்லி 4. கட்டை

8. சொற்களின் கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்கு வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.

| கு | தி | → | தி | ரு | கு | → | கு | றி | ப் | பு | → | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

1. புத்தி 2. புத்தகம் 3. புத்தன் 4. புதினம்.

9. தற்போது என்னுடைய வயது எனது அம்மாவின் வயதின் 1/3 ஆகும். ஆறு வருடங்களுக்கு முன்னர் எனது அம்மாவின் வயது என்னுடைய வயதின் ஆறு மடங்காகும் ஆறு வருடங்களுக்கு முன்னர் எனது அம்மாவின் வயது யாது?

1. 30 வருடங்கள் 2. 24 வருடங்கள் 3. 32 வருடங்கள் 4. 42 வருடங்கள்

ஒரு வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களும் அவர்கள் விரும்பிக்கற்கும் பாடங்களும் அம்புக் குறியினால் காட்டப்பட்டுள்ளன.

| ஆண்கள் | | பாடங்கள் | | பெண்கள் |
|---|---|---|---|---|
| விமல் + அமல் + கமல் | → | தமிழ் | ← | மாலா + சீதா + குமாரி |
| விமல் + சுதன் + கமல் | → | கணிதம் | ← | சீதா + குமாரி + கமலா |
| சுதன் + மதன் + அமல் | → | ஆங்கிலம் | ← | ராதா + சீதா + மாலா |

10. மூன்று பாடங்களையும் விரும்பிக் கற்பவர் யார்?

1. நிமல் 2. குமாரி 3. சீதா 4. சுதன்

11. ஒரு பாடத்தை மட்டும் விரும்பிக் கற்பவர்கள் யாவர்?

1. கமலா, விமல் 2. சுதன், ராதா 3. மதன், சீதா 4. விமல், சீதா

12. என் கோலங்களை அவதானித்து பொருத்தமான பெறுமானத்தை தெரிவு செய்க




1. 7 2. 6 3. 3 4. 12

கீழுள்ள எண்கள் ஒவ்வொன்றும் உருக்கள் மூலம் காட்டப்பட்டுள்ளதை அவதானியுங்கள் (இலக்கங்கள் அமைந்துள்ள ஒழுங்கில் உருக்கள் தரப்படவில்லை)

718 - ▭ ◇ ⬯ 534 - ○ △ ⬭

431 - △ ○ ▭ 845 - ◇ △ ⬭

13. △ என்ற உருவினால் காட்டப்பட்டுள்ள உரு எது?

1. 3 2. 4 3. 5 4. 8

14. இலக்கம் 5இற்கு இடப்பட்டுள்ள உரு எது?

○ 1. ◇ 2. ▭ 3. ⬭ 4.



"உன்னால் இணைக்க முடியுமென்றால் ஒரு போதும் துண்டிக்காதே"

15. 

இவ்வுருவில் நிழற்றியுள்ள பகுதி முழு உருவின்

1. 1/12 பங்கு  2. 1/18 பங்கு
3. 1/16 பங்கு  4. கூறமுடியாது

16. இரண்டு மோட்டார் வண்டிகள் ஓர் இடத்தில் இருந்து புறப்பட்டு அவை ஒவ்வொன்றும் எதிர்திசைகளில் 200 மீற்றர் தூரம் செல்கின்றன. பின்னர் ஒரு வண்டி வலப்பக்கமும் மற்றைய வண்டி இடப்பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் 200 மீற்றர் தூரம் செல்கின்றன. இப்போது இரண்டு வண்டிகளுக்கு இடையே உள்ள தூரம் எவ்வளவு?

1. 600m  2. 200m  3. 800m  4.400m

17. நேற்றைய முதல் நாள் பணம் வாங்கிய ஒருவர் நாளை மறுநாளுக்கு அடுத்த நாள் அப்பணத்தை திருப்பித் தருவதாகக் கூறினர். அவர் ஏழாந்திகதி செவ்வாய்க்கிழமை பணத்தைர் தருவார் எனவே அவர் பணம் வாங்கியது

1. 5ம் திகதி - வெள்ளி  2. 4ம் திகதி - திங்கள்
3. 3ம் திகதி - திங்கள்  4. 2ம் திகதி - வியாழன்

18. 


அருகே உள்ள உருவில் 1ம் இலக்கக் கூட்டில் இருந்து முன்னாலும், பின்னாலும் பாய்ந்து சென்ற ஒரு விளையாட்டுத் தவளை பாய்ந்த கூடுகளின் இலக்கங்கள் முறையே 4,2,5,3,6,4 என்பனவாகும். இதன்படி தவளை அடுத்துப்பாயும் கூட்டின் இலக்கம் யாது?

1.5  2.4  3.1  4.6

பின்வரும் தகவலைக் கொண்டு 19,20 வினாக்களுக்கு விடை தருக.

| | | | | |
|---|---|---|---|---|
| 2kg அரிசி | + 500g பருப்பு | = | ரூபா 180 |
| 500g பருப்பு | + 750g மாசி | = | ரூபா 810 |
| 2kg அரிசி | + 750g மாசி | = | ரூபா 870 |

19. 1kg பருப்பு + 1 1/2kg மாசி இன் விலை யாது?

1. ரூபா 1600  2.ரூபா 1630  3.ரூபா.1750  4. ரூபா.1620

20. 3kg அரிசி + 1kg பருப்பு + 500g மாசி ஆகியவற்றின் விலை யாது?

1. ரூபா 800  2.ரூபா 750  3.ரூபா.800  4. ரூபா.850

21. ஆறு ஒன்றில் எப்போதும் இருப்பது

1. மண்  2.செடிகள்  3. மீன்  4. நீர்

22. ஒட்டுக் கன்றுகளைப் பெற்றுப் பயிரிடக் கூடிய பழப்பயிர்

1. பலா  2.விளா  3. வாழை  4.மரமுந்திரி

23.வயிற்றிலே பற்களைக் கொண்டுள்ள உயிரினம்

1. பாம்பு  2. இறால்  3.நண்டு  4.கணவாய்

24. தண்டுகளில் பிசினுள்ள தாவரம்

1. அகத்தி 2. கீழ்க்காய்நெல்லி 3. முருங்கை 4. கொய்யா

25. இலுப்பை பூக்கும் மாதம் எது?

1. மாசி 2. ஆவணி 3. சித்திரை 4. ஆடி

26. தனித்தனியாக நடமாடும் பிராணி எது?

1. கிளி 2. நாய் 3. குருவி 4. யானை

27. சூரியனுக்கு மிகத் தொலைவில் உள்ள கோள்

1. புவி 2. செவ்வாய் 3. சனி 4. சுக்கிரன்

28. எமது நாடு குடியரசானது எப்போது?

1. 1972 2. 1948 3. 1905 4. 1987

29. பொலனறுவையை இராசதானியாக்கிய மன்னன்

1. புவனேஹபாகு 2. மகாபராக்கிரமபாகு
3. பண்டுகாபயன் 4. முதலாம் விஜயபாகு

30.கல்சியம் நிறைந்துள்ள உணவுப் பொருள்

1. கரட் 2. முருங்கை 3.நெத்தலி 4.முட்டை

31. இரும்பைச் சூடாக்கி கோடாரி செய்பவன்

1. தச்சன் 2. கொல்லன் 3. மேசன் 4. குயவன்

32. வெளிநாட்டுத் தபால் பொதிகளை இடும் தபால் பெட்டியின் நிறம்

1. நீலம் 2. சிவப்பு 3. பச்சை 4. மஞ்சள்

# கதிரவன் புலமைத்தேர்வு - 08

**முடிவுத் திகதி -25.01.2012**

பெயர் :- ..............................................................................

முகவரி :- ..............................................................................

..............................................................................

பாடசாலையின் பெயர் :- ..............................................................................

..............................................................................

இப்பகுதியை வெட்டி விடைகளை எழுதி, கடித உறைக்குள் வைத்து அனுப்பவும் (ஆ-ர்)

33. பின்வருவனவற்றில் பூண்டு வகைத் தாவரம் எது?

1. குப்பைமேனி 2. புடோல் 3.மிளகாய் 4. அறுகு

34. சிறந்த வித்தின் இயல்புகளில் ஒன்று

1. பருத்திருத்தல் 2. வித்தில் தழும்புகள் காணப்படல்
3. வித்துறை கடினமாயிருத்தல் 4. நன்கு முதிர்ந்திருத்தல்

35. பின்வருவனவற்றில் நீந்தத் தெரியாத மிருகம் எது?

1. தவளை 2. முதலை 3. ஒட்டகம் 4. நாய்

36. மத்திய மாகாணத்தின் தலைநகரம் எது?

1. கொழும்பு 2. காலி 3. கண்டி 4. அனுராதபுரம்

37. இலங்கையில் அடிக்கடி ஏற்படும் இயற்கை அனர்த்தம்

1. புவிநடுக்கம் 2.இடி மின்னல் 3. சுனாமி 4. எரிமலை

38. வீச்சு வலையில் வலை நீரினுள் தாழ்வதற்காக வலையின் அடியில் கட்டப்படும் பொருள்

1. றப்பர் மிதவை 2. ரெஜிபோம் 3. ஈயக்குண்டு 4. மரமிதவை

39. எழுத்தறிவுடையோரால் மட்டும் உபயோகிக்கும் ஊடகம்

1. இன்ரநெற் 2. பத்திரிகை 3. வானொலி 4. தொலைபேசி

40. நன்நீரை அண்டிய பகுதிகளில் அழிவடைந்து செல்லும் தாவரம் பின்வருவனவற்றில் எது?

1. தென்னை 2. கிண்ணை 3. வம்மி 4. கண்ணா.

**கதிரவன் புலமைத்தேர்வு - 07 வெற்றிபெற்றோர்.**
**தி.ஷனுஜனா, ஜீ.பவலக்சன், தி.ரனுசன்**

## புலமைக்கதிர்

**விடைகளை எழுதி அனுப்புங்கள்**
**(முதல் மூன்று வெற்றியாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | ................ | 11 | ................ | 21 | ................ | 31 | ................ |
| 02 | ................ | 12 | ................ | 22 | ................ | 32 | ................ |
| 03 | ................ | 13 | ................ | 23 | ................ | 33 | ................ |
| 04 | ................ | 14 | ................ | 24 | ................ | 34 | ................ |
| 05 | ................ | 15 | ................ | 25 | ................ | 35 | ................ |
| 06 | ................ | 16 | ................ | 26 | ................ | 36 | ................ |
| 07 | ................ | 17 | ................ | 27 | ................ | 37 | ................ |
| 08 | ................ | 18 | ................ | 28 | ................ | 38 | ................ |
| 09 | ................ | 19 | ................ | 29 | ................ | 39 | ................ |
| 10 | ................ | 20 | ................ | 30 | ................ | 40 | ................ |

**முகவரி**
ஆசிரியர்
கதிரவன்
புலமைக்கதிர் - 08
புதுக்குடியிருப்பு - EP
மட்டக்களப்பு.



"காரியங்கள் மாறுவதில்லை, நாம் மாறுகிறோம்"

# விஷ்வப்பிரம்மா பொன் அகம்



ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து
கொடுப்பதுடன் பழைய தங்கம் வெள்ளி
நியாயமான விலையில் வாங்கப்படும்.

உரிமையாளர் - மூர்த்தி
தட்டார் தெரு
தாழங்குடா - 03
தொ.பே - 0776529929

# சிவா மல்டி கொம்பிலெக்ஸ்

மட்/ புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக
பயிற்சிப் புத்தகங்கள், புலமைப்பரிசில் மாணவர்களுக்கான புதிய
வெளியீடுகள், பாடசாலை உபகரணங்கள், பரிசுப் பொருட்கள்,
வாழ்த்தட்டைகள், தெளிவான போட்டோபிரதி, பெக்ஸ், ஸ்கேனிங்,
லெமினேட்டிங், கொம்பியூட்டர் பிரிண்டிங், Book வைண்டிங்,
E-mail & Internet CD & DVDMobitel, Dialog, Airtel, Reload.



**பிரதான வீதி, புதுக்குடியிருப்பு.**
**தொ.பே : 065-3641247 / 077-0452861**
**உரிமையாளர் :- P.சிவனேசராஜா**



# சஜி ஹேர் சலூன்

பிரதான வீதி, புதுக்குடியிருப்பு



## *SUJIR SALOON*

**சிகை அலங்காரம்**
**போஸ் வோஸ்**
**கலர் டை**
**கெட் மசாஜ்**

**சுஜிவன் — 0750789666**

புதுக்குடியிருப்பில் புதுப் பொலிவுடன்

# சது ஜுவலரி



# SATHU JEWELLERY



பிரதான வீதி, புதுக்குடியிருப்பு - 05

அழகு மங்கையர் ஆசைப்படுவது
கண்ணைக் கவரும் அற்புதமான வேலைப்பாடு
அருமையான டிசைன்கள் அசல் 22 கரட் தங்க நகைகள்



தரத்தின் சிகரம்
துரிதமான வேலை துல்லிய சேவை!

பென்சிப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்புப் பொருட்கள் மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

WESTERN UNION
moving money for better

Money Master

பணப்பரிமாற்று முகவர்
065-4923750 / 075-9122138

கதிரவன் சஞ்சிகைக்கு தகுதியான ஆக்கங்கள் மற்றும் விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
0754265201, 0776968250



வணசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே: 0652227170